# சுடர்

CHUDAR

கலை
இலக்கியத்
திங்கள்
இதழ்



" வீணையில் எழும் ராகங்கள் "
குறுநாவலின் ஒரு காட்சி

ஆடி 1979 விலை ரூபா 1-00

# வாசகர் வாய்மொழி

## சிந்திக்க வைத்துவிட்டதே!

ஆனித்திங்கள் சுடர் கண்டேன். "மா புளிக்கிறது......" ஆசிரிய தலையங்கம் சிந்திக்க வைத்து விட்டது.

இலங்கையில் வெளிவரும் மாத இதழ்களில் காசு கொடுத்து வாங்கிப் படிக்கக் கூடியவற்றுள் சுடரும் ஒன்று.

அ. ற. நிஃமத்துல்லாஹ், மருதமுனை—1.

## ஈழம் என்று ஏன் அழைக்கக் கூடாது?

தங்களது ஆனிமாத இதழ் கண்ணுற்றேன். ஆசிரிய தலையங்கத்தில் தமிழீழம் என்று குறிப்பிட்டிருந்தீர்கள் ஏன் எமது தலைவர்கள் கூட "தமிழ் ஈழம்" என்றேதான் கூறுகிறார்கள். தமிழ் ஈழம் கிடைத்து விட்டால், பின்னர் அதிலும் முஸ்லீம் ஈழம், சிங்கள ஈழம், என்று உருவாகலாமல்லவா? "ஈழம்" என்றே ஏன் கூறக்கூடாது! ஈழத்திலே வாழும் தமிழர்கள், முஸ்லீம்கள், பறங்கியர்கள், ஏன் சிங்களவர்கள்கூட "ஈழவர்" என்றும் இவர்களது மொழி "தமிழ்" என்றும் இருக்கக்கூடாது! எங்கும் எதிலும் ஈழம் என்றே எழுதுங்கள்; உரையாற்றுங்களேன்.

ஈழநாயகம், கல்முனை.

## திருஷ்டிபட்டுவிடாதா, என்ன?

ஏ! சுடரே, உனக்கு என்ன பெரிய நினைப்போ? அப்படியென்ன பெரிதாக படைத்துக் கிழித்துவிட்டாய்? சும்மா வீணாக கர்வப்படாதே.

என்ன முழிக்கிறாயா? பின்னே என்னவாம். உன் உண்மையான திறமை கண்டு எல்லோரும் ஒரே மனதாக புகழ்ந்து தள்ளுகிறார்களே. திருஷ்டி பட்டு விடாதா என்ன?

ராஜி பூதத்தம்பி,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

## யாவுமே நன்று! நன்று!!

சிறுகதைகள் அத்தனையும் முத்துக்கள். நக்கீரனின் பதில்கள், 'அரி'யின் மனம்விட்டுச் சில வார்த்தைகள் யாவுமே நன்று நன்று! தமிழ் நெஞ்சங்களில் நிறைந்த சுடரே நீ வாழி, நீடுழி வாழி!

பொ. மகேந்திரராஜா,
வன்னியூர்.

## குறுநாவல் நன்று!

ஆனிமாத சுடர் இதழில் வெளியாகிய தமிழ்ப்பிரியாவின் "வீணையில் எழும் ராகங்கள்" என்ற குறுநாவல், இதழை மேலும் ஒருபடி உயர்த்தி செல்கிறது. குறிப்பாக அந்த நாவலுக்கு ஏற்ப சித்திரத்தை தீட்டிய வருக்கும் வாழ்த்துக்கள். பல அம்சங்களை திரட்டி வாசகர்களின் கைகளில் சுடர்விடும் இதழே உனது சுடரை ஒரு நொடிப்பொழுதில் அணையவைக்காமல் நீண்ட பக்கங்களுடன் கொழுத்து, வாசகர்களின் கைகளில் மேலும் பல நொடிகள் பிரகாசிக்க மாட்டாயா?

எம். கிருபானந்தன்,
நீதிமன்ற வீதி, மல்லாகம்.

## சிந்திக்க வேண்டுகிறேன்!

பலம் வாய்ந்த பகையை வெட்டிச் சாய்க்கும் துறை என்னும் கருத்துப்பட விளங்கும், 'வல்வெட்டித்துறை' என்னும் ஊரின் பெயரைத் தாங்கள் "வல்வெற்றித்துறை" என 'மேடை'யில் மாற்றி எழுதியிருப்பது பொருத்தமற்றதாகவே தோன்றுகிறது.

பொதுவாக நமது ஊர்களின் பெயர்களெல்லாம் காரணப் பெயர்களே—வலிந்து பொருள் கொள்வது அவசியந்தானா? சிந்திக்க வேண்டுகிறேன்!

வாகரைவாணன்.
சுதந்திரன் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

## அட்டையை வர்ணத்தில் வெளியிடவேண்டும்!

சுடரில் பல அம்சங்களைக் கண்டு நிறைவு கொள்ளும் வேளையிலே அட்டைப்படம் அழகில் பின்வாங்கி நிற்கின்றதே,

அட்டைப்படத்தை பல வர்ணங்களில் வெளியிட்டால் தமிழக மஞ்சரிகளுடன் போட்டிபோட தயங்காதே எம்மிதழ்! ஏன்? விற்பனையும், வாசகர்களை பெருக்கும் என் பதில் ஐயமில்லையே.

ஈழகணேஷ்,
மத்திய வீதி, கொழும்பு—12.

## பாகாய்ச் சுவைத்தன!

மிகக் காலதாமதமாகவே ஆனிச்சுடர் கிடைத்தது, ஆவலுடன் புரட்டினேன். அற்புதம் அபாரம் முதலிலிருந்து கடைசிவரை!

கதைகள் கட்டுரைகள் அத்தனையும் பெரு விருந்து—கவிதைகள் அனைத்தும் அருமருந்து.

'அரி'யின் மனம் விட்டு சில வார்த்தைகள்—ஓர் துணைத் தலையங்கம். பக்கத்துக்கு பக்கம் பல்சுவைத் துணுக்குகளும் பாகாய் சுவைத்தன. நக்கீரனின் உருக்கமான பதில்கள் என் இதயத்தை பிழிந்தன.

தமிழ்ப்பிரியாவின் குறுநாவல் (வீணையில் எழும் ராகங்கள்) எப்படி விதம் விதமான லய சுருதிகளை எழுப்பி இதயங்களை இன்பக் 'கிளுகிளு'ப்பில் ஆழ்த்துகின்றனவோ அது போன்று அவரது வழமையான எழுத்து நடையில் வந்து விழும் வார்த்தைகள்—பதங்கள் எங்கெல்லாமோ சென்று நெளிந்து இழைந்து விளையாடுகின்றன.

க. மாணிக்கம்,
அச்சுவேலி வடக்கு.

### எழுத்தாளர்களும்—சுடரும்!

ஆனிமாத சுடர் நிறைவைத்தந்தது வே. தில்லைநாதனின் 'உயர்ந்தவர்' கதை நல்ல கண்ணோட்டத்தில் எழுதப்பட்டிருந்தது. பத்திரிகை ஆசிரியர்கள் பழையவர்களை—பிரபலமானவர்களை மட்டும் மீண்டும் மீண்டும் வளர்த்துக்கொண்டிருந்தால் புதியவர்கள் உருவாவது கடினம் என்பதை அழகாக சித்திரித்துள்ளார். சுடர் ஆசிரியரும் இக்கதையை வரவேற்றிருப்பதிலிருந்து இதன் கருவை ஏற்றுக்கொள்கிறார் என்றே எண்ணுகிறேன். ஒவ்வொரு இதழிலும் புதியவர் ஒருவரின் சிறுகதை வெளியிடப்படவேண்டும் என்பது என் அவா.

மேலும் சுடரில் ஒரு எழுத்தாளருக்கு வருடமொன்றிற்கு மூன்று சிறுகதைகளுக்கு மேல் இடம் கொடுப்பது தவிர்க்கப்படவேண்டும். சுடர் இதழில் வருடமொன்றுக்கு 36 சிறுகதைகள் இடம் பெறுகின்றன. குறிப்பிட்ட ஒரு சிலருக்கே மீண்டும் இடம் கொடுத்தால் புதியவர்களுக்கு இடம் கிடைப்பது கடினமல்லவா? கடந்த இரு மாத இதழ்களில் புதியவர்கள் இடம் பெற்றிருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

ச. முருகானந்தன்,
அரசினர் வைத்தியசாலை, கம்பளை.

(சுடரில் இளைய தலைமுறை எழுத்தாளர்களுக்கே முக்கியத்துவம் அளித்து வருகிறோம். வளர்ந்துவரும் எழுத்தாளர்களை சுடர் மேலும் வளர்த்து விடத்தயங்காது என்பதற்கு 'தமிழ்ப்பிரியா'வின் குறுநாவலை பிரசுரித்தமை ஒரு எடுத்துக்காட்டு. ஓரளவு பிரபலமானவர்கள் மிகத்தரமான படைப்புகளை அனுப்பும் போது அவற்றை நிராகரிப்பதும் அழகில்லையல்லவா?)

# மனம்விட்டு சில வார்த்தைகள்

..அரி

தமிழிலிருந்து முஸ்லிம்களை வேறுபடுத்திக் காட்டும் முகமாக, முஸ்லிம் முதுபெரும் தலைவர் ஒருவர் கடந்த மாதம் விடுத்த பத்திரிகை அறிக்கையையிட்டு கிழக்கிலங்கையை சேர்ந்த முஸ்லிம் நண்பர் ஒருவர் என்னிடம் கண்டனம் தெரிவித்து மனம் வருந்தினார்.

'மாறிமாறி வரும் ஸ்ரீலங்கா—யூ. என். பி. ஏகாதிபத்திய அரசாங்கங்களுக்கு 'வால் பிடிக்கும்' சுயநல வாத நோக்கங்கொண்ட முதலாளித்துவ முஸ்லிம் தலைவர்களின் 'வழமையான பல்லவி'யை நாம் ஏன் பெரிது படுத்தவேண்டும்? என அவருக்கு நான் ஆறுதல் கூறினேன்.

''தமிழ்மொழி தமிழ்பேசும் மக்கள் அனைவருக்குமே சொந்தமானது. தமிழ் வேறு முஸ்லிம்கள் வேறு அல்ல'' என்ற கருத்தை பல முஸ்லிம் — தமிழ் அறிஞர்கள் இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி மகாநாட்டில் வலியுறுத்தியமை மனதுக்கு சற்று இதமாக இருக்கிறது.

"தமிழிலக்கியமோ, இஸ்லாமிய இலக்கியமோ, கிறிஸ்தவ இலக்கியமோ எதுவாயிருப்பினும் தமிழ் எனக் கூறப்படும்போது அவை தமிழனின் சொத்துக்களாகி விடுகின்றன. தமிழிலக்கியத்துக்கு பாதிப்பு ஏற்படாமல் பாதுகாப்பவனே உண்மையான தமிழன்'' என மகாநாட்டுத் தலைவர்களில் ஒருவரான தமிழக அறிஞர் செந்தாமரை கே. பி. எஸ். ஹமீது 'செந்தமிழில்' பேசிய பேச்சையும் தமிழக மணிவிளக்கு ஆசிரியர் அல்ஹாஜ் ஆ. கா. ஆ. அப்துஸ்ஸமது, "இஸ்லாம் எங்கள் வழி; இன்பத்தமிழ் எங்கள் மொழி'' எனச் சிறப்பித்துக்கூறியதையும், கேட்டிருந்தால் தமிழில் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு 'இலங்கை முஸ்லிம்கள் அறபுத் தமிழ் பேசுகிறார்கள் தமிழர்கள் வேறு; நாங்கள் வேறு' என அறிக்கை விட்ட முஸ்லிம் தலைவர் வெட்கித் தலை குனிந்திருப்பார்.

இது ஒரு புறமிருக்க,

தமிழர் தலைவரும், எதிர்க்கட்சி முதல்வருமான திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களை, மகாநாட்டில் பங்குபற்றி பேசுமாறு அழைப்பு விடுத்துவிட்டு கடைசி நேரத்தில் பேசுவதற்கு அனுமதி மறுத்தமைக்கான மர்மம் என்ன? ஏதும் 'திரைமறைவு' வற்புறுத்தல்களா அல்லது வேண்டுமென்றே புறக்கணிக்க வேண்டும் என்ற நோக்கமா இதற்கு காரணம் என்பது புரியவில்லை.

மாநாட்டு அமைப்பாளர் அல்ஹாஜ் உவைஸ் அவர்களுக்கே இது வெளிச்சம். நடந்துவிட்ட தவறுக்கு அவர் என்ன விளக்கம் அளித்தாலும் இலக்கிய உலகம் அதனை நிச்சயம் ஏற்றுக்கொள்ளவே மாட்டாது.

# எப்படித்தான் சென்றாளோ!



சின்னஞ்சிறிய பெண் அவள்; விளையாட்டுக் குணம் இன்னும் போகவில்லை. எந்த நேரமும் தோழியருடன் விளையாடுவாள். அவளுக்கு வயது வந்து விட்டதை தாய் உணர நியாயமில்லை. தாயைப் பொறுத்தவரை அவள் குழந்தைதானே! சமீபகாலமாக அவளுடைய போக்கிலே சிறு மாற்றம் காணப்பட்டது, சிலசமயம் கண் சிவந்திருக்கும்; சொன்னால் கேட்டால் தானே. தோழியருடன் தினைப்புனத்திற்குச் செல்வாள். சோலையில் உலாவுவாள். நதியிலே நீராடுவாள். வீட்டுக்கு வந்தால் அவள் முகத்திலே கொஞ்சம் சோகம்; வழக்கமான உணவு இல்லை உறக்கம் கூட இல்லை. கண்டபடி வெளியே செல்வதால் சில சமயம் பேய்க் குறைபாடாக இருக்குமோ? எதற்கும் வெறியாடும் வேலனைக் கூப்பிட்டுக் கேட்க வேண்டும். வேலைக் கையில் தாங்கியவன் வந்தான்; வெறியாடினன். பிள்ளையைப் பிடித்துவிட்ட பேயை அகற்றிவிட்டான். மகளின் நோய் குறைந்து விட்டது; தாய்க்கு மகிழ்ச்சி.

திடீரென மகளைக் காணவில்லையே! எங்கே போய் விட்டாள்? அவளுக்கு நடந்தது என்ன? நற்றாய் (பெற்றதாய்) படுகின்ற துன்பத்தைச் செவிலித்தாய் அறிந்து விட்டாள். செவிலித்தாய்க்கும் அவளிடம் அளவுக்கு மிஞ்சிய பாசம். பெற்றதாய் வீட்டில் இருந்து புலம்ப செவிலித்தாய் மகளைத் தேடத் தொடங்கினாள்; விசாரித்தாள். அவளைப்பற்றித் தோழிமாருக்குத் தெரியாமலா போய்விடும்? உண்மையை அறிந்து விட்டாள். மகள் தலைவனுடன் கூடிக்கொண்டு பாலைவன வழியாய்ப் போய்விட்டாள். செய்தி கேட்ட தாய்க்கு இப்பொழுது தான் உயிர் வந்தது. மகளுக்கு என்ன நேர்ந்ததோ என்று அச்சமடைந்தவள் இப்பொழுது கொஞ்சம் ஆறுதல் அடைந்தாள்; என்றாலும் பெற்றமனம் பித்துத்தானே!

“மகள் எப்படி என்னை விட்டுப் போகத் துணிந்தாள்? அம்மா, அம்மா என்று எப்போதுமே என்னைச் சுற்றி வருவாளே! என்னைக் காணாமல் விட்டால் தவியாய்த் தவித்துப் போவாளே! அவளிடம் ஒரு அழகான பச்சைக் கிளி, அதன் சொண்டைப் பார்க்க வேண்டுமே! என்ன அழகு! பவளம் போன்ற வாயினால் அக்கா அக்கா என்று அழைக்கும். ஒரு முறை ‘அத்தான்’ என்று அழைத்தது. இவள் போய் அதன் வாயைப் பொத்தி விட்டாள்; அதை விட்டுவிட்டுப் போய் விட்டாளே, இந்தக் கிளியின் துயரத்தைக்கூட அவள் நினைத்துப் பார்க்கவில்லையே. அவள் சென்ற கணம் முதல் கிளி உண்ண மறுக்கிறது. அதே என் அருமை மகள் விளையாடிய பாவையும் பந்தும் அநாதையாகக் கிடக்கின்றன. இவற்றை எப்படி மறந்தாள்? இவளுக்கு மட்டும் எத்தனை தோழியர்? இவர்களுடன் சேர்ந்து முற்றத்திலே விளையாடும் போது எவ்வளவு கலகலப்பு! பிரியமுடன் நேசித்த தோழியரையுமல்லவா விட்டுவிட்டுப் போய்விட்டாள். உடலால் வளர்ந்தாலும் உள்ளத்தால் அவள் குழந்தை தான். அவள் பேச்சு பால்போல் இனிக்கும். மழலை இன்னும் மாறவில்லை. அவள் தோழியரோடு முற்றத்தில் விளையாடுவது இன்னும் கண்ணுக்குள் நிற்கிறது. ஒருநாள் மகள் அதிக நேரம் ஓடி ஆடி விளையாடி விட்டாள். அவளின் கால்கள் தளர்ந்து விட்டன. விழுந்து விடுவாள் போலக் காணப்பட்டாள். நான் ஓடிப்போய் தாங்கியிராவிட்டால் அவள் நிலத்திலே வீழ்ந்து விடுவாள். இப்படியான என் மகள் கல்லும் முள்ளும் நிறைந்த பாதையிலே காதலன் பின் சென்றாளே. எப்படி அவளால் நெடுந்தூரம் நடக்கமுடியும்? அவள்

---

### தகவத்தின் பரிசு

1979ம் ஆண்டு ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் வெளிவந்த சிறுகதைகளை மதிப்பீடு செய்து திரு. சொக்கன் எழுதிய ‘இயக்கமும் நிலைப்பாடும்’ (4—3—79: வீரகேசரி) சிறுகதையை சிறந்தது என தேர்ந்தெடுத்து, திரு. சொக்கனுக்கு தமிழ்க் கதைஞர் வட்டம் (தகவம்) 25 ரூபா பரிசையும் பாராட்டையும் வழங்குகிறது.

தகவம் மதிப்பீட்டில் பாராட்டுப் பெறும் சிறுகதைகளின் விபரங்கள்:

’இரண்டு உலகங்கள்’ (மல்லிகை) ஜனவரி 79
எழுதியவர்: நுஃமான்.

‘ஓர் உள்ளம் ஊமையாகிறது’ (சுடர்) பெப்: 79
எழுதியவர்: காவலூர் எஸ். ஜெகநாதன்.

---

செல்லும் பாதை மிகவும் கொடுமையானது வெம்மையானது கடும் வெய்யிலில் அவள்; துடிதுடித்துப் போவாளே?

இக்காட்சி ஐந்திணை ஐம்பது என்னும் நூலில் பாலைத்திணையில் வருகிறது. பாலை என்பது பிரிவு ஒழுக்கத்தைக் குறிக்கும். உடன் போக்கு என்பது தலைவி தலைவனுடன் கூடிச் செல்வது. தலைவி தாய் தந்தையரைப்பிரிந்து தலைவனுடன் கூடிச்செல்வதையும் தலைவியைத் தாய் தந்தையர் பிரிவதையும் மிகவும் உருக்கமாகச் சித்திரிக்கும் பாடல்கள் இவை:

பாவையும் பந்தும் பவளவாய்ப் பைங்கிளியும்
ஆயமு மொன்று மிவைநினையாள்—பால் போலும்
ஆய்ந்த மொழியினள் செல்லுங்கொல் காதலன்பின்
காய்ந்து கதிர்தெறூஉங் காடு

**எழுதியவர்: முல்லைமணி**



பாலினைப் போன்ற ஆராய்ந்தறிந்த மொழியினையுடைய என்மகள், தலைவன் பின்னால் போய் விட்டாள். அவள் செல்லும்வழி சூரிய வெப்பம் மிகுதியாய்ச் சுடுகின்ற கொடிய பாலைவனம். அவள் தான் வைத்து விளையாடிய பாவையையும் பந்தையும் பவளம் போன்ற வாயையுடைய பச்சைக்கிளியையும், தோழியரையும் விட்டுச் சென்று விட்டாள். எப்படித்தான் இவற்றை நினையாமல் சென்றாளோ (என்று நற்றாய் தனக்குள்ளே கவலைப்பட்டவளாய்ச்சொல்லிக் கொண்டாள்.

தோழியர் சூழத் துறைமுன்றில் ஆடுங்கால்
விழ்பவன் போலத் தளருங்கால் —தாழாது
கல்லத ரத்தத்தைக் காதலன்பின் போதல்
வல்லவோ மாதர் நடை.

தோழியர் நாற்புறமும் சூழும்படி முற்றத்திலேவிளையாடும் பொழுதிலும் விழுந்து விடுவாள் போல் தளர்ச்சியுறும் கால்களையுடையவள் என்மகள் கற்கள் நிரம்பிய கடுமையான பாதையிலே தலைவன் பின்னாலே ஓய்ந்து போகாமல் செல்ல முடியுமா என் மகளால்? (என்று நற்றாய் கவலையுற்று உரைத்தாள்).

# அத்தியாயம் (2)

அழகு மிளிர மௌசுமி நடப்பதையே பார்த்தபடி மதுராஜ் அவள் பின்னால் சற்று தூரத்தில் நடந்து வருவான். அவள் வருகின்ற நேரத்தை கணக்கிட்டு வைத்து... தானும் அதே நேரத்தில் ஆபீஸிற்கு கிளம்பி விடுவான். ஒரு கவின் மிக்க சயநதனம் ஊர்ந்த மாதிரி அவள் நடக்கும் போது... அந்த நடையோடு சேர்ந்து அசைகின்ற கூந்தலின் அழகையே பார்த்துப் பார்த்து ரசிக்கலாம் போல் இருக்கும் அவனுக்கு. ஆனால் ஒரு நாளாயினும் அவளின் பார்வை அப்படி இப்படி அசைந்தது கிடையாது. வீதியில் நடக்கும்




போது யாரையுமே திரும்பிப் பார்க்க மாட்டேன் என சத்தியம் செய்தது மாதிரி ஒரு பிடிவாதத்தோடு தான் அவள் நடந்து போவாள்.

ஆராதிக்க வேண்டும் போல ஆசையை ஏற்படுத்துகின்ற அழகியவள். அவளின் ஒவ்வொரு அசைவிலும் பெண்மையின் நளினம் பளிச்சிடும். உதடுகள் சிந்துகின்ற சிரிப்பில் கன்னம் குழிகின்ற அழகை... நிம்புடன் இணைந்து பிரிகின்ற நயனத்தின் அழகை..., கான்ட்பாக்கின் மேல் தவழும் விரலின் அழகை... இப்படி...ஒவ்வொரு அழகையும் தனித்தனியாக ரசிக்கலாம்.

இந்த அழகை வைத்துக் கொண்டே மதுராஜின் ஆசைகளை அவள் மெல்ல மெல்ல சுருதி கூட்ட ஆரம்பித்தாள். எட்ட நின்று கொண்டே மனதைப் பித்தாக ஆட வைத்தாள். அவளின் அழகு, கவர்ச்சி எல்லாமே அவனின் நினைவைச் சுற்றி மொய்த்துக் கொண்டு விலக மறுத்தது.

அவள் மீட்ட ஆரம்பித்த ஆசைகளுக்கு அவளிடம் தான் ஆஸ்பதம் தேடிப்போக வேண்டும். அவளுடன் எப்படிப் பேசுவது? நெஞ்சில் பாட ஆரம்பித்த நினைவுகளோடு... பேசுகின்ற சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தான் மதுராஜ்.

நித்தமும் இருவரும் ஒரே பஸ்ஸில் தான் வேலைக்குப் போகின்றார்கள். ஆனால்... கதைக்க முடியாதபடி அவனுள் ஒரு தயக்கம். சாதாரணமாகவே கதைக்காதவள்— திரும்பிப் பாராதவள்— அவன் தன் ஆசையை சமர்ப்பித்ததும் 'தூக்கி எறிவது போல்' பதில் சொல்லி விட்டால்......!

ஒரு நாள் மௌசுமி தனியாகத் தான் பஸ்ஸிற்காகக் காத்து நின்றாள். மதுராஜும் சற்று தள்ளினாற் போல் நின்று கொண்டிருந்தான். நீண்ட நேரமாக பஸ் வரவே இல்லை. அவள் அடிக்கடி கரத்தைத் திரும்பி நேரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மதுராஜிற்கு அவளுடன் போய்க் கதைக்க வேண்டும் போலிருந்தது. இப்படி ஒரு தனியான சந்தர்ப்பம் இனி மேல்கிடைக்கவே மாட்டாது. அவன் தயக்கத்தை உதறி விட்டு... அருகில் நெருங்கி...

> இக்குறு நாவலில் வரும் ஒரு காட்சியே அட்டைப் படமாக சித்திரிக்கப்பட்டுள்ளது.

"மிஸ்! எக்ஸ் கியூஸ்மி..." என்றான்.

"என்ன விஷயம்?" என்பது போல் மௌசுமி அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"வந்து... நான் உங்களுடன் ஒரு முக்கியமான விஷயம் கதைக்கப் போகிறேன். நீங்கள் தப்பாக நினைக்க மாட்டீர்களே?" அவன் தயங்கிக் கொண்டு கேட்டான்.

"நோ...இதில் தவருக நினைப்பதற்கு என்ன இருக்கிறது. நீங்கள் தயங்காமல் கேளுங்கள்...!" என்பது மாதிரி அவள் மெல்லத் தலையை அசைத்தாள். இதயத்தை மெதுவாக வருடுவது மாதிரி சிறு புன்னகை அவளின் இதழோரத்தில் பூத்து நின்றது.

கேட்க நினைத்ததை மதுராஜ் கேட்டு விட்டான். அவள் அதிர்ந்து போனவளாய் நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தாள். ஒரு நிமிஷம்தான் சட்டெனப் பார்வை தாழ்ந்து நிலத்தில் பதிந்து கொண்டது.

அவன் முகம் அவளின் பதிலின் எதிர்பார்ப்பில் உயர்ந்து அவளையே பார்த்துக் கொண்டு நின்றது. என்ன பதில் சொல்வது? அவள் மௌனமாகி விட்டாள்.

தெளிந்த நினைவுகளின் மேல் கல்விட்டெறிந்தது போல் மனம் குழம்பிப் போய் விட்டது மௌசுமிக்கு. இப்படி ஒரு கேள்வியைத்தான் அவன் கேட்கப் போகின்முன் என்று அவள் எண்ணிக்கூடப் பார்க்கவில்லை. நிமிர்ந்து—நிதானமாக இன்னுமொருமுறை அவனைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. தன் நினைவுகளோடு... மனத்தினுள் வரைந்து வைத்திருக்கிற முகத்தோடு அவன் இணைந்து நிற்பானு? என்று சரிபார்க்க வேண்டும் போலிருந்தது. எந்த முடிவுமே எடுக்க முடியாமல் சிந்தனையுடன் விரல்களைக் கோர்த்துக் கோர்த்துப் பிரித்தபடியிருந்தாள். அவளையும் மீறி முகத்தில் உணர்ச்சிகள்

# சூறுவளியே வா

"ஊடாரடி"

சூறுவளியே நீயும் வந்து
சோஷலிசத்தைச் சொன்ஞய்! செய்தாய்!
சீறிஞய்! சினந்தாய்! சிலரை மட்டும்
செல்வச் சீமான் ஆகிடச் செய்தாய்!
ஊரறியாது!
ஊமைச் செய்திகள்!!
உலகம் அறிந்திட ஒருநாள் வாராய்!
சூறுவளியே! உன்னை நினைத்தால்
சோறும் இறங்கா(து) தொண்டையுள் என்பார்!

* * *

மீண்டும் ஒருநாள் மீறிநீ வந்திடில்
"மேன்மைக் காட்சிகள்" மிகுதமாய்க் காணலாம்!
தகரம் பொறுக்கியோர் தரத்தை உணரலாம்.
தந்திக் கம்பிகள் புகுமிடம் காணலாம்!
சிகரம் ஆகிடச் சிந்தனை செய்திடும்
சிலரின் உண்மைத் தகுதியை அறியலாம்!
"ஜேம்டின்" மறைந்த மாயமும் தெரியலாம்
"ஜே. பி." மார்களின் உருவமும் தெரியலாம்
ஜம்பவான் ஆகி நிவாரணப் பொருட்களை
ஜன்னலால் கடத்தியோர் ஜாடைகள் அறியலாம்!
பொதுச்சொத்துகளைத் தாயும் மகனும்
புகுந்து தூக்கிய புரட்சிக் காட்சிகள்
அதுமட்டுமல்ல! அடுத்த வீட்டாரின்
அம்மியைக், குழவியை அரிசிப்பானையை
சுருட்டியோர் விபரம் துலங்கிடும் எனவே......
சூறுவளியே ஒருநாள் வாராய்!

* * *

சூறுவளியே நீயும் வந்து
சோஷலி சத்தைச் சொன்ஞய்! செய்தாய்
சீறிஞய்! சினந்தாய்! ஊரை எல்லாம்
சிதைத்திடச் செய்தாய்! மூடி வாய் என்ன?
கூறுகள் போடும் கூட்டம் ஒழிந்ததா?
குள்ளநரிகளின் ஆட்டம் முடிந்ததா?
நீறுதான் பூத்த நெறுப்பாய் குமுறுதே!
நெஞ்சமே! ஏறும் மாற்றம் நடந்ததா?
ஆகவே சூறு வளியே மீண்டும்
வேக மாகவே விரை!

## "நீர் நிற்க, யாம் இருக்க"

பட்டணத்துப் பிள்ளையார் துறந்து விட்டார், என்ற செய்தியைக் கேட்ட மன்னனுக்கு மிக வருத்தம் உண்டாயிற்று, சேவகனைப் போய் அழைத்து வரச் சொன்னார். அவன் எங்கோ ஒரு திறந்த வெளியில் ஒரு மரத்தடியில் அமர்ந்து கொண்டிருந்தார், சேவகன் அங்கே போனான்; யார் யாரோ பெரிய மனிதர்கள் அவரைச்சுற்றி கைகளைக் கட்டிக் கொண்டு பணிவாக நின்று கொண்டிருந்தார்கள். அரசன் வேறு ஓர் அதிகாரியை அனுப்பினான், அவரும் திரும்பி வந்து விட்டான், மந்திரி போனார் திரும்பி வந்தார். கடைசியில் மன்னனே போய்ப் பார்த்தார், முன்னேல்லாம் மன்னனைக்கண்டால் பணிவாக நின்று மரியாதை செய்யும் பட்டணத்தார், இப்போது அவனைக்கண்டும் கால் மேல் கால் போட்டு அமர்ந்திருந்தார்.

மன்னன் அவரருகில் சென்றார், மெள்ள இப்படி எல்லாவற்றையும் விட்டுவிட்டு வந்திருக்கிறீர்களே? என்ன லாபத்தைக் கண்டீர்? என்று கேட்டான். பட்டணத்தார் ஒன்றும் யோசிக்கவில்லை, "நீர் நிற்க, யாம் இருக்க" என்று சுருக்கமாகக் கூறி மௌனமானார்.

அனுப்பியவர்—ச. ஐயாத்துரை.

வேகமாக கோடு போட்டு அழித்தன.

"மிஸ்...! உங்கள் பதில்...?" அவன் அவளின் மௌனத்தை சகித்துக் கொள்ளப் பொறுமையற்றவனாக மெல்லக் குரல் கொடுத்தான். அவள் எப்படியான பதிலைச் சொல்வாளோ என்று மனம் அஞ்சிக்கொண்டிருந்தது.

அவனின் கேள்வி மீண்டும் இதயக்கதவில் முட்டியபோது மனம் மெல்ல நடுங்குவது போலிருந்தது அவளுக்கு. ஆதரவாக எதையாவது பற்றிக்கொள்ள வேண்டும் போல ஒரு நடுக்கம். அவனுக்கு பதில் சொல்ல வேண்டும். சொல்லும் போது அவனின் ஆசைகள் அழிந்து போகாமல்...... ஏமாற்றத்தை நோக்கிச் சரிந்து போகாமல்... பக்குவமாகச் சொல்ல வேண்டும். ஆணவக்காரப் பெண்ணிவள் என்று அவன் நினைக்காத வண்ணம் சொல்ல வேண்டும். மௌசுமி நிலத்தை நோக்கி நின்ற பார்வையை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள். இமைகள் ஒரு வித படபடப்பில் இணைந்து பிரிந்து கொண்டிருந்தன.

"நீங்கள்... இப்படி என்னிடமே நேரடியாகக் கேட்டதை நான் தப்பாக எடுக்கவில்லை. ஆனால்...எனக்காக ஒருமுடிவை எடுக்கின்ற பொறுப்பை நான் வீட்டவர்களிடம் தான் ஒப்படைத்திருக்கிறேன். எனக்கு ஒரு துணையை நானே நிச்சயித்துக் கொள்வதை என்மனம் விரும்பவில்லை" மிக மெதுவாக... தாழ்ந்து போன குரலில்... அவன் மனம் நோகா வண்ணம் சொன்னாள் மௌசுமி.

ஒரு நிமிஷம், அவன் மனத்தின் பூரிப்பு எல்லாம் அடங்கினால் போல்...கண்களில் ஏமாற்றம் நிழலாய் விரிந்தது. ஆனாலும்... அவள் சொன்ன வார்த்தைகளின் அர்த்தத்தை நினைத்த போது...பட்டென ஏமாற்றத்தின் எதிரொலி மறைந்து போய் விட்டது.

எவ்வளவு சாதுரியமான பதில். உங்களை ஏற்பதில் எனக்கொன்றும் ஆட்சேபனையில்லை. ஆனால்... என் விருப்பத்தை விட வீட்டவர்களின் விருப்பம் தான் முக்கியம் என்பதை அழகாக—அமைதியாக சொல்லியிருக்கிறாள். அவளின் அழகில், பண்பில் மட்டுமல்ல... புத்திசாலித்தனமான பேச்சில் கூட அவனுக்கு இப்போ ஆசையாக இருந்தது.

அதன் பின் இருவருமே ஒன்றும் பேசவில்லை. பஸ் வந்ததும் மௌனமாகவே ஏறிக் கொண்டார்கள்.

இரவு படுக்கையில் சாய்ந்திருந்த போது... மதுராஜ் பற்றி மனத்துள் நினைத்துப் பார்த்தாள். நினைவுகள் மெதுவாக அவன் விருப்பத்திற்கு வளைந்து கொடுப்பது போலத் தான் இருந்தது. அந்த அமைதியான முகம்... நெஞ்சில் பதியப் போகின்றேன் என அடம் பிடிப்பது போல் மீண்டும் மீண்டும் நினைவைச் சுற்றிச் சுற்றி வந்தது. ஆனால்... மௌசுமி எதையுமே வீட்டில் சொல்லவில்லை. சொல்ல வேண்டிய அளவிற்கு முக்கியமானதாக அவளுக்குப் படவில்லை.

எண்ணி இரண்டு மாதங்கள் நகர்ந்து போய் விட்டன. அவள் அதே பழைய மௌசுமியாகத் தான் வேலைக்குப் போய் வந்து கொண்டிருந்தாள்.

அன்று லீவு நாள். மௌசுமி தன் அறையினுள் அமர்ந்து ஓவியம் வரைந்து கொண்டிருந்தாள். அம்மா ஒருவித தயக்கத்தோடு தான் அவள் அறையினுள் நுழைந்தாள்.

"மௌசுமி!"

"என்னம்மா?" அம்மாவின் குரல் கேட்டதும் கையில் இருந்த பென்சிலை மேசை மேல் வைத்து விட்டுத் திரும்பினாள் மௌசுமி.

"ஒரு முக்கியமான விஷயம் உன்னுடன் கதைக்க வேண்டும்." அம்மா சொல்வதை நிறுத்தி விட்டு அவளைப் பார்த்தாள்.

அப்படி என்ன முக்கிய விஷயமாக இருக்கும்? மனதிற்குள் எண்ணிக்கொண்டவளாக

"சொல்லுங்கள் அம்மா...!" என்றாள்.

"வந்து... உன் அண்ணா தான் சொன்னார். இதில்... உன்னுடைய விருப்பம் தான் முக்கியம் என்பதால் முதலில் உன்னுடைய விருப்பத்தைக் கேட்ட பின்புதான்... முடிவு சொல்ல வேண்டும் என்று..." அம்மா புதிரோடு கதை சொன்னாள். எத்தனையோ முறை தட்டிக்கழித்த மௌசுமி இம் முறையும் இதை உதைத்து விடுவாளோ என்ற அச்சம் அம்மாவிற்கு.

மௌசுமிக்கு அம்மா சொல்ல வந்த விஷயம் என்ன வென்று புரிந்து விட்டது. ஆனாலும்... அதை வெளிக்காட்டாமல்... "எதற்கு அம்மா என்னுடைய விருப்பம் முக்கியம்?"

அம்மா விடயத்தைப் பற்றிச் சொன்னாள். அவனைப் பற்றிய விபரம் எல்லாம் சொன்னாள். மௌசுமிக்கு நெஞ்சம் சிலிர்த்தது. "ஒரு வேளை... என்னுடன் கதைத்தது பற்றியும் ஏதாவது சொல்லியிருப்பார்களோ?" இதயம் குறு குறுத்தது. பதில் ஒன்றும் பேசாமல் அம்மாவையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

"உன்னைப் போல சாமர்த்தியமுள்ள பெண்தான் அவர்களுக்கு வேண்டுமாம். அதற்காகத்தான் சீதனம் கூட அதிகம் வேண்டாம். பெண்ணை மட்டும் தந்தால் போதும் என்று கேட்கிறார்கள். என்ன பதில் சொல்வது?" அவள் மௌனத்தைக் கலைப்பது போல் அம்மாதான் மீண்டும் கேட்டாள். அவள் டக்கென தன் விருப்பத்தைச் சொல்ல விரும்பவில்லை.

"எனக்கு இரண்டு நாள் அவகாசம் தாருங்கள் அம்மா. யோசித்துப் பதில் சொல்கிறேன்."

அம்மா சரியென்றுவிட்டுப் போய் விட்டாள். மௌசுமி மீண்டும் பென்சிலை கையில் எடுத்துக் கொண்டு வரைய ஆரம்பித்தாள். நினைவுகள் சறுக்கிக் கொண்டு வலம் வந்தன. "அவன்—மதுராஜ் மீண்டும் உன்னைத் தேடி வந்திருக்கிறான் மௌசுமி. மறுத்து விடாதே"! என உள் மனம் நச்சரித்தது. அவளைப் பற்றிய நினைவுகள் நெஞ்சில் சுகந்தமாய் மணம் கமழ ஆரம்பித்தது. சிம்மாளச் சிரிப்பில் இதழ்கள் விரிய படத்தை வரைய ஆரம்பித்தாள் மௌசுமி.

அவள் 'ஷோகேஸ்' மேல் கையை வைத்துக் கொண்டு நிற்கிறாள். அவன் பாதி உருவம் தெரிய அவள் பின்னால் மறைந்து நிற்கிறான். "அவன் முகம் கொஞ்சம் சரிவர வில்லைப் போல் தெரிந்தது. மெதுவாக அழித்துத் திருத்திக் கொண்டாள். இப்போ... அவன் முகம் நன்றாக அமைந்து விட்டது. இனி...கலர் பண்ண வேண்டியதுதான்.

"சபாஷ் அக்கா. குட் ஐடியா. உண்மையில் இந்தக் காட்சி நன்றாக இருக்கிறது. வெடிங் ரயிமில்... வருகின்ற பிறசண்சை வைத்து இந்த ஐடியாவில் படமெடுக்கலாம். நன்றாக இருக்கும். இல்லையா அக்கா?" பின்னால் நின்று படத்தைப் பார்த்த ரமியா அபிப்பிராயம் சொன்னாள். மௌசுமி பதில் பேசாமல் மென்மையாகச் சிரித்தாள். மகிழ்வின் உணர்வு நெஞ்சில் வண்ணமாய் இசைத்துக் கொண்டிருந்தது.

"அது சரியக்கா...! அம்மா உங்களுடன் ரகசியமாக என்ன கதைத்து விட்டுப் போகின்றா?"

மௌசுமி திடுமெனத் திரும்பி அவளைப் பார்த்தாள். "உனக்கு அந்த விசயம் தெரியாமல் இருக்க மாட்டாதே ரமியா?"

"விசயம் தெரியுமக்கா. நீங்கள் என்ன பதில் சொன்னீர்கள் என்பது தான் தெரியாது."

"ஏன்? உனக்கு இந்தத் திருமணத்தில் விருப்பம் இல்லையா ரமியா?"

"இதில்... என் விருப்பம் முக்கியமில்லையக்கா... மதுராஜை திருமணம் செய்யப் போவது நீங்கள் தானே! உங்கள் விருப்பம் தான் முக்கியமானது...!"

மௌசுமி... திகைப்போடு அவளை நோக்கினாள். "இருக்கலாம் ரமியா. ஆனால்... நீ... இப்படிச் சொல்வதில் ஏதோ காரணம் இருக்கவேண்டும்.

## 'அறிவு தெளிவுபட்டது'

அதிவீர ராம பாண்டியன் இயற்றிய நைடதத்தைப் பற்றி அவனுடைய அண்ணன் வரதுங்க பாண்டியனின் மனைவி "வேட்டை நாயின் நடை" போலிருக்கிறது என்று விமர்சனம் செய்ததைக் கேட்டு, பெரும் சினம் கொண்ட அதி வீர ராம பாண்டியன், தன் அண்ணனுடன் போர் புரிய படை நடத்திச் சென்றான். அப்பொழுது ஒரு சேவகன் அவனிடத்தில் ஓடி வந்து வரதுங்க பாண்டியனின் மனைவி தந்ததாக ஒரு ஓலையை அவனிடத்தில் கொடுத்தான், அந்த ஓலையில் பின்கண்டபடி எழுதியிருந்தது, வாலியின் கொலைக்குக் காரணமாயிருந்த சுக்ரீவனையோ! இராவணனின் மரணத்திற்கு முக்கியமாயிருந்த விபூசணனையோ, தன் அண்ணன் கர்ணனைக் கொன்ற அர்ச்சுனனையோ, அதிவீரராமா! நீ பார்க்கவேண்டாம், பரதனையும் இராமனையும் பார் என்று சுடச் சுட எழுதியிருந்தாள்; பாண்டியன் சினமெல்லாம் அவிந்து "அறிவு தெளிவுபட்டது" திரும்பி நடவுங்கள் என்று தன் படை வீரர்களுக்குக் கட்டளை இட்டான்.

கவி. ரவீந்திரர்

என்னவென்று என்னிடம் சொல் ரமியா...!''

'வந்து ஒன்றுமேயில்லே யக்கா...!''

"பார்த்தாயா? பொய் சொல்கிறுயே! ஒன்றுமில்லே என்றுல்... ஏதோ இருக்கிறது என்று தான் அர்த்தம். என்னிடம் சொல்வதற்கு ஏன் ரமியா இப்படித் தயங்குகின்ருய்... ஏன் மதுராஜைப்பற்றி ஏதாவது...!''

"நோ...நோ... அப்படியில்லேயக்கா. அவருடைய தம்பியால் தான்......!''

"யார்? கார்த்திகையா சொல்கிருய்?''

"ஆமாம்! அவனைத்தான். ஒருநாள் நான் அக்கடமிக்குப் போகும் போது... வழியில் நிறுத்தி வைத்துக் கொண்டு... ஏதேதோ எல்லாம் சொன்ஞன். தான் நினேத்ததை நிறைவேற்றியே தீருவேன் என சவால் வேறு விட்டான்... அவ்வளவு திமிர் அவனுக்கு...!'' படபடத்தாள் ரமியா.

மௌசுமிக்கு விஷயம் தெளிவாக விளங்கி விட்டது. "ஓஹோ! அவ்வளவு தூரத்திற்கு வந்து விட்டானு? நீ என்ன பதில் சொன்னுய் ரமியா?''

"அண்ணன் இருக்கத்தக்கதாக இவருக்கு காதலும் கத்தரிக்காயும் தான் இல்லாத குறை. எனக்கு ஆத்திரம் தாங்கவில்லே. இனிமேல் இப்படி டிஸ்ரொப் பண்ணினுல்... காலில் இருப்பது முகத்திற்கு வரும் என்று சொல்லி விட்டேன்.''

மௌசுமிக்கு சிரிப்பு வந்து விட்டது. "நீ ஒரு துணிந்த வாயாடியடி. இப்படிப் பதில் சொல்ல... ஒரு நாளேக்கு ரேட்டில் வைத்து ஏதாவது சொன்ஞன் என்றுல்... நீ என்ன பண்ணுவாய்?''

"ஓ...ஓ...! அவன் எல்லாம் செய்வான் தான். எனக்கும் ஒரு அண்ணு இருக்கிருர் என்பது அவனுக்குத் தெரியும் தானே?''

## "இதைப் படைத்தவன் நீ; இது உனக்குரியது''

பொன் நிறம் பெற்ற தாமரைப்பூ அது, அதில் நறுமணம் வீசியது, எங்கும் இல்லாதது. அருமையான அது தன் பொய்கையிலே பூத்தது என்று கொண்டு போனுன், அரண் மனேயில் நுழைவதற்கு முன் ஒரு செல்வர் அகப்பட்டார். அவர் அந்த மலரைக் கண்டவுடன் இதை எனக்குக்கொடு என்ன விலேயானுலும் தருகின்றேன் என்ருர். விலேயா! குடிமகன் வியந்தான்; அதற்குள் அரசன் உள்ளே இருந்து வந்தான், அவன் இருவரையும் பார்த்தான்; இந்த மலர் எனக்குத்தானே? உனக்கு ஆயிரம் பொன் பரிசாகத் தருகிறேன் என்ருன், செல்வர் இரண்டாயிரம் தருகின்றேன் என்ருன், மறுபடி அரசன் மூவாரம் பொன் தருகின்றேன் என்ருன், இப்படியே ஏலம் கூறினுர்கள் இருவரும். இடையில் நின்ற குடிமகனுக்கு சிந்தனே ஓடியது, இந்த அரிய மலரை பணத்தால் அளக்கும் இவர்கள் இதைப் பெறத் தக்கவர்களல்ல என்று முடிவு கட்டினுன். இவ்விருவரும் மயங்கி நிற்க, நேரே கடவுள் கோயிலுக்குச் சென்ருன், இறைவன் திருவடியில் மலரை வைத்து வணங்கினுன். இறைவா! இது என் மலர் என்று எண்ணி ஏமாந்தேன், பணக்காரர்கள் பணம் கொடுத்து வாங்கி விட்டால் தம்முடையதாகி விடும் என்று நினேக்கின்ருர்கள், "இதைப் படைத்தவன் நீ இது உனக்குரியது'' இதை மறந்து போனேன் என்று சொல்லி இறைவனே ஏந்தி மன நிறைவோடு திரும்பினுன்.

கவி. ரவீந்திரன்

மௌசுமி ஒன்றுமே பேசாமல் சட்டென மௌனமாகி விட்டாள். "ரமியா, எதற்காக இந்தக் கதையை இப்போது சொன்னுள்? இதற்கும் மதுராஜிற்கும் என்ன சம்பந்தம்?'' மௌசுமி நிதானமாகச் சிந்தித்துப் பார்த்தாள். பதில் கிடைத்து விட்டது.

"நான் மதுராஜை மணந்து கொண்டால்... அவன்—கார்த்திக்—அடிக்கடி இங்கே வருவான். அதை ரமியா விரும்பவில்லே. அதனுல் விபரீதம் வரும் என அவள் அஞ்சுகின்ருள்...! அந்த அஞ்சுதலில் நியாயம் இருக்கிறது. அதற்காக... அதற்காகத்தான்...!''

மௌசுமி ஒரு முடிவிற்கு வந்து விட்டாள். ஆனுலும்... நெஞ்சில் விண்ணென்ற ஒரு வலிப்பு. எழுந்த வேகத்தில் ஆசைகள் மடிந்து போய் விட்ட மாதிரி மனத்தில் ஒரு வெறுமை. ஆனுல்... அதை தங்கைக்காக—ரமியாவிற்காக அவளால் தாங்கிக் கொள்ள முடியும்.


"என்னக்கா மௌனமாகி விட்டீர்கள்?'' அவள் சிந்தனேயைக் கலேத்தாள் ரமியா.

"ஒன்றுமில்லே ரமியா உனக்கு விருப்பமில்லாத இடத்தில்... உனக்கு பாதிப்பு ஏற்படுகிற இடத்தில்... நான் சுயநலமாகவே நடந்து கொள்ளவே மாட்டேன். உனக்காக... உனக்காகத்தான் ரமியா... நான் விட்டுக் கொடுக்கிறேன்...!'' சொல்லும் போது கூடமெல்லிய தவிப்பில் நெஞ்சம் விம்முவது போலிருந்தது அவளுக்கு.

"அக்கா! என் அருமை அக்கா...! பேச முடியாத தடுமாற்றத்தோடு மௌசுமியின் கரங்களேப் பற்றிக் கொண்டாள் ரமியா. அவள் கண்கள் மெல்ல பனித்தன. மனத்தின் மெல்லிய கசிவில் மௌசுமியின் விழிகளும் லேசாய் நனேந்தன.

மறுநாள் மௌசுமி தன் முடிவைச் சொன்ன போது... அம்மா ஒன்றுமே புரியாது திகைத்துப் போய் நின்ருள்,

(தொடரும்)



# நீல நிற நைலக்ஸ்

– செ. குணரத்தினம் –

இம்மாத **பரிசுக்** கதை

**பொ**ழுது பலபலவென்று விடிந்து கொண்டிருந்தது. பறவையினங்களெல்லாம் குரலெழுப்பி திக்குத்திக்காகப் பறந்து கொண்டிருந்தன. காளிக்குட்டி துடித்துப் பதைத்து எழுந்து கொண்டான், செண்பகமும் பெரும் பாடுபட்டு பிள்ளைவயிற்ருேடு எழுந்து வந்து குசினிக்குள் நுழைந்து கொண்டாள்.

காளிக்குட்டி, சாம்பல் திட்டியில் கிடந்த கரித்துண்டை எடுத்து சப்பித் துப்பி, முகம் கை கால்களை அலம்பிக்கொண்டு விருந்தையின் ஓரமாகத் தொங்கிய திருநீற்றுக் குடுகையினுள் கையை ஒட்டி நெற்றியில் மூன்று கோடுகளைப் போட்டுவிட்டு நிமிரும் போது செண்பகம் தேனீர்க்கோப்பையைக் கொண்டுவந்து அவன் முன்னுல் நீட்டினுள்.

மடமடவென்று தேனீரைக் குடித்து, கோப்பையைச் செண்பகத்திடம் கொடுத்துவிட்டு அவளை அன்போடு கேட்டான்.

"செண்பகம், உனக்கு இதுதானே மாசம்?" அவள் லேசாகச் சிரித்தாள்.

"ஓம்மச்சான், அடிவயித்துக்குள்ள லேசா நோகுது, எப்படியும் இந்தக் கிழமைக் கிடையில் பெத்துப்போடுவன் போலதான் கிடக்கு, இனி நமக்குப் போதும் மச்சான். இதோட ஒரேயடியா 'ஒப்புறேசனையும் செய்து போடோணும்' எல்லாத்துக்கும் வசதியாக இந்த ஆஸ்பத்திரிக்குத் தர்ன் போகோணும், உடுத்துப் போறதுக்கும் ஒரு நல்ல சீலயில்ல!" என்று செண்பகம் சொல்லியபடியே காளிக்குட்டியைப் பார்த்தாள். அவனும் பார்த்தான்.

மாற்றிக்கட்ட ஒரு சேலையில்லாமல் கந்தல் துணியைச் சுற்றிக்கொண்டு நிற்கும் அவளைப்பார்த்ததும்அவனுக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது. கலியாணம் முடித்து மூன்று பிள்ளைகள் தலைமுறைக்கும் அவள் காளிக்குட்டிக்கு மனைவியாக விருந்து என்ன சுகத்தைத்தான் கண்டாள்! ஒழுங்கான உடை, உணவு எதுவுமே இல்லாமல் அவள் மாத்திரமல்ல காளிக்குட்டியின் குடும்பமே படும் வேதனைகளை ஊரே அறியும். "இந்தத் தரித்திரம் பிடித்த வாழ்க்கையிலிருந்து விடிவே ஏற்படாதா!" என்று காளிக்குட்டி எண்ணுத நேரமேயில்லை. நல் வாழ்வு இன்று வரும் நாளை வரும் என்று நம்பி நம்பி பல வருடங்களைக் காளிக் குட்டியின் குடும்பம் கடத்திக்கொண்டிருந்ததே தவிர வாழ்க்கையில் எதுவித மாறுதல்களுமே இதுவரையில் ஏற்பட்டதேயில்லை.

"ஆஸ்பத்திரிக்கு உடுத்திப் போக நல்ல சேலையொன்று இல்லை" யென்று செண்பகம் சொன்னதும் பெருமூச்சை விட்டபடியே அவளை மறுபடியும் அனுதாபத்தோடு பார்த்தான் காளிக்குட்டி.

"இந்தமுற எடுக்கிற சம்பளத்தில ஒரு சீல வாங்கித்து வாங்க! காச கனக்கக்கினக்க குடுக்கவேணும், ஒரு இருவது இருவத்தஞ்சுக்குள்ள பாத்து நெசவுச்சீலொண்டு வாங்கினுப்போதும்! ஊத்தைக்கு இழுபடக்கூடிய நிறத்தில பாத்து வாங்கினு நல்லம், கடும் நீல நிறந்தான் எனக்கு விருப்பம்" என்று செண்பகம் சொன்னுள், அதைக்கேட்டதும் காளிக்குட்டிக்கு அவனையறியாமலேயே கண்கள் பனித்தன.

"எனக்கு எல்லாம் தெரியும் செண்பகம், உனக்கொரு நல்ல சீல வாங்கித்தரோணு


மெண்டு எனக்குக் கனநாளா ஆச, என்ன செய்யிற! கையில மடியில இல்லாமத்தான் என்ட ஆசையெல்லாம் அப்படியே நெஞ்சுக்குள்ளேயே கிடக்கு, ஒரு மாதத்தில பத்துப் பதினஞ்சி நாளைக்கு வேல செய்து எடுக்கிற பிச்சச் சம்பளத்தில சோறு கறியாக்கி கைக்கு வாய்க்கு ருசியாக பத்தியமாத் தின்னவே ஏலாமக்கிடக்கு, போன மாதம்தான் ஒரு பதினெட்டு நாள் வேல செய்திருக்கன்! என்னவோ பாப்பம்." சரி சரி அந்த வெத்திலக் கடதாசியைக் கொண்டு வா நேரம் போயித்து, இண்டைக்கு ஆரும் லீவெடுத்தானுகளோ என்னவோ தெரியா, இல்லாட்டி ஊட்ட திரும்பித்து வரவேண்டியதுதான், மெய்

தான் செண்பகம் உனக்கு உரமா வகுத்துக்க நொந்திச் செண்டா எனக்கு ஆரிட்டையும் விசளமொண்டு அனுப்பிப் போடு! சரி நான் பொயித்து வாறன்.'' என்று காளிக்குட்டி நடையைக் கட்டினுன், செண்பகம் திண்ணையில் போய்க் குந்தியிருந்தவாறே அவனை இரக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஊத்தைபடிந்து ஓட்டைகள் விழுந்த'பெனியன்'காளிக்குட்டியின் ஊத்தை மேனியை பெரும்பாடுபட்டு மறைத்துக் கொண்டிருந்தது, கால்பக்கம் கிழிந்து தொங்கிக் கொண்டிருந்த சாறனை தூக்கி மடித்துக் கட்டிக் கொண்டு விசுக்விசுக்கென நடந்த கணவனின் கோலத்தைப் பார்த்துக் கொண்டிருந்த செண்பகத்திற்கு வாய் விட்டு அலறவேண்டும் போலிருந்தது. காளிக்குட்டி மாதாகோவில் சந்தியைத்தாண்டி, பாக்கியராசாவின் கடைக்குப் பக்கத்தால் திரும்பும் வரை கண்ணிமை வெட்டாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்த செண்பகம் பெருமூச்சு விட்டுக்கொண்டே எழுந்து மீண்டும் போய் குசினிக்குள் நுழைந்துகொண்டாள்.

காகித ஆலைக்கு வேலைக்குப் போகும் சின்னத்தம்பியும், முருகுப்பிள்ளையும் புகைவண்டியைப் பிடிக்கும் வேகத்தில் சைக்கிளில் போய்க்கொண்டிருந்தார்கள். அமிர்தகழிக்கு வரும் முதலாவது பஸ் கோரியடி வரை சென்று திரும்பி வந்து கொண்டிருந்தது. பொன்னுத்துரையரின் அழி மட்டைகளை ஏற்றிய கரத்தையும் மாமாங்கப் பிள்ளையார் கோவிலையும் தாண்டிச்சென்று கொண்டிருந்தது. மீன் வியாபாரி செபமாலையும், சீவல் தொழிலாளி சிவக்கொழுந்தும் 'சைக்கிள் ரேஸ்' ஓடுவதைப் போல விரைவாக வந்து கொண்டிருந்தார்கள்.

அதிகாலையில் தினமும் காண்கின்ற இந்தக் காட்சிகளையெல்லாம் பார்த்துக் கொண்டே காளிக்குட்டி மட்டக்களப்பு மாநகர சபையை நோக்கி ஓட்டமும் நடையுமாகப் போவது வழக்கம். அமிர்தகழிக் கிராமத்திலிருந்து இரண்டுகல் தொலைவில் அமைந்திருக்கும் மட்டக்



## கலைஞர் கருத்துக்கள்

* தேனீக்களைப்பார்த்து பொருளீட்டுவது எப்படியென்று சுற்றுக் கொள்கிறான் வணிகன். மலருக்கு மலர் தாவுவது எப்படி என்று கற்றுக் கொள்கிறான் காமுகன். உரிமை பறிப்போரை சூழ்ந்து எதிர்த்து தாக்கி விரட்டுவது எப்படியென்று கற்றுக்கொள்கிறான் இலட்சியவாதி.

* கலப்பைகள் நிலத்தைக் கீறுகின்றன. நேர்த்தியான உணவு கிடைக்கின்றது, கடுமையான அடக்குமுறைகள் நெஞ்சைக் கீறுகின்றன. நிலைகுலையாத உறுதி கிடைக்க வேண்டும் என்பதற்காக.

* சிறைக்குச் செல்வது ஒரு பெண்ணின் முதல் இரவு அனுபவத்தைப் போன்றது. சிறையில் வாழ்வது, தாயின் கர்ப்பத்திற்குள் இருப்பது போன்றது. சிறையிலிருந்து விடுதலை பெறுவது- இரத்த சேமிப்பு நிலையத்திலுள்ள ரத்தம் காயமடைந்த போர்வீரனின் உடலில் பாய்ந்தோடுவது போன்றது.

இத்தனையும் இலட்சிய வாதிக்கு!

(கலைஞர் மு. கருணாநிதி எழுதிய சிறையில் பூத்த சின்னச்சின்ன மலர்களிலிருந்து)

அனுப்பியவர்: கிருஷ்

களப்பு மாநகரசபைக்கு அவன் என்றுமே பஸ் ஏறிப் போனதாகச் சரித்திரமே கிடையாது. மழையோ வெயிலோ எதுவானாலும் அவன் நடந்து சென்று நடந்தே வருவான். காளிக்குட்டியை இந்த விசயத்தில் எவருமே அசைக்க முடியாது. போகவர பஸ்ஸுக்குக் கொடுக்கின்ற பணத்தை அவன் மதிய வேளையில் நாராயணத்தாரின் கடையில் கொடுத்து அவனுடைய அரை வயிற்றையாவது நிரப்பிக் கொள்வான். இது பலருக்குத் தெரியாத விடயம்.

காளிக்குட்டிக்கு நிரந்தரமான வேலை ஒன்றுமே கிடையாது. அதற்காக அவன் ஓடாத இடமுமில்லை. பிடிக்காத பெரிய மனிதர்களின் கால்களுமில்லை. ஆனால் எதுவுமே அவனுக்கு வெற்றியளிக்கவில்லை. இந்த வேளையில் தான் தனக்கு படிப்பும், பணமும் இல்லாததையெண்ணி காளிக்குட்டி பலமுறை தனிமையில் அழுது தீர்த்திருக்கிறான்.

வாலிபனாக இருந்தபோது வேலிகள் அடைத்து, விறகு வெட்டிக் கொடுத்து, மூட்டைகளைச் சுமந்து காலத்தைக் கடத்திய காளிக்குட்டிக்கு திருமணம் முடித்து மூன்று பிள்ளைகளுக்கும் தந்தையான பிறகு மேற்படி தொழில்களில் ஈடுபட்டுழைப்பதற்கு இயலாமலிருந்தது. அதனால் அவன் உடம்பை வருத்தாத ஏதாவது வேலையொன்றில் சேர ஓடிப் பார்த்தான். கடைசியில் அவனுக்கு மாநகரசபை தான் கை கொடுத்தது.

தெருக்களை கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்யும் நகர சுத்தித் தொழிலாளியானான் காளிக்குட்டி. இந்த வேலை கூட அவனுக்கு நிரந்தரமானதல்ல. நிரந்தரமான தொளிலாளர்களில் யாராவது லீவெடுத்தால் தான் அந்த இடத்தில் காளிக்குட்டியைப் போட்டு வைப்பார்கள். எவரும் லீவெடுக்கவில்லையென்றால் அவனுடைய கதி அதோகதி தான். ஆனால் எப்படியாவது அவனுக்கு ஒரு மாதத்தில பத்துப் பதினைந்து நாட்கள் வேலை கிடைத்து விடும். அதற்காக வேறுவழியின்றி காளிக்குட்டி தினமும் காலையில் எழுந்து மாநகரசபைக்குப் போய் வரத் தவறுவதேயில்லை.

அன்றும் வழக்கம் போல காளிக்குட்டி மாநகரசபைக்கு வேலைக்குப் போனான். அவனுடைய நல்ல காலம் அவனுக்கு வேலை. கிடைத்தது, நிரந்தர தொழிலாளர்கள் இருவருடன் காளிக்குட்டியையும் சேர்த்து மூவரையும் மட்டக்களப்பு பஸ் நிலையத்திலிருந்து பெரிய ஆஸ்பத்திரி வரைக்கும் கூட்டிச் சுத்தம் செய்வதற்காக அனுப்பி வைத்தார்கள்.

ஏனோ தெரியவில்லை அன்று காளிக்குட்டி வழக்கத்திற்கு மாறாக வேலையில் ஆர்வத்தோடில்லாமல் சோம்பிப் போயிருந்தது சக ஊழியர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. காளிக்குட்டியை வைத்தே தங்கள் வேலையையும் முடித்துக் கொள்ளும் தந்திரம் அன்று அவர்களுக்கு பலனளிக்கவேயில்லை. "ஏன்காளி இண்டைக்கு ஒரு மாதிரியா இருக்கிறா" என்று அவர்கள் அவனை விசாரித்தார்கள். "ஒன்றுமில்லை"! என்று அவன் அவர்களிடம் சொல்லிச் சமாளித்தாலும் காலையில் வரும் போது அவன் மனைவி செண்பகம் சொன்ன வார்த்தைகளும், அவள் பிள்ளை வயிற்றோடு நின்ற கோலமும் அவனைப் போட்டு வருத்திக் கொண்டேயிருந்தது. பலத்த சிந்தனைக்கு மத்தியில் அன்

* பிறர் உரிமையைப் பறிப்பது எவ்வாறு குற்றமோ, அவ்வாறே நம் உரிமை பறிபோவதை பார்த்துக் கொண்டு வாளாவிருப்பதும் பெருங் குற்றம்.

(டாக்டர் மு. வரதராசன் எழுதிய 'கரித்துண்டு'' நாவலிலிருந்து)...

அனுப்பியவர்—கிருஷ்,

றையவேலை நேரம் ஒருவாறாக முடிவுற்றது.

மாநகரசபையின் முன்னாலிருந்த பைப்பில் கை, கால், முகங்களைக் கழுவிக் கொண்டு முற்ற வீதிக்குப் பக்கத்தால் நடந்து வாசிகசாலையின் பக்கம் வந்ததும் மெதுவாக அவன் மடியை நீக்கிப் பார்த்தான். அங்கே, பஸ் நிலையத்தைக் கூட்டும் போது கண்டெடுத்து வைத்த கசங்கிய நூறு ரூபாவும் வைத்தபடியேயிருந்து காளிக்குட்டியைப் பார்த்துச் சிரித்தது!

"மனிதர்கள் மட்டுமல்ல ஆண்டவன் கூட தன் பக்கம் திரும்பிப் பார்க்கிறானில்லையே"! என்று மனம் நொந்து போயிருந்த காளிக்குட்டிக்கு அன்று கடவுள் மேல் அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்பட்டது. செண்பகம், காலையில் வரும் போது ஆசையோடு அவனிடம் சொன்ன வார்த்தைகளை நூறு தடவைகளுக்கு மேல் எண்ணியெண்ணிப் பார்த்தான். "இன்று அவளுக்கு ஒரு அழகான நீலநிற நைலக்ஸ் சேலையொன்று தான் வாங்க வேணும்- அதைக் கொண்டு போய் அவளுடைய கையில் கொடுத்து அவளடையும் மகிழ்ச்சியைப் பார்த்து துள்ளிக்குதிக்க வேண்டும்." என்று எண்ணிக்கொண்டு வேகமாக நடந்தான். காந்திசிலைக்கு அண்மையில் காளிக்குட்டி வந்து கொண்டிருக்கும் போது அங்கே சில பொலிஸ்காரர்கள் பிடவைக்கடைகளில் பதுக்கி வைத்திருந்த சேலைகளைக் கைப்பற்றி பொதுமக்களுக்கு நியாயமான விலையில் விற்றுக் கொண்டிருந்தார்கள். காளிக்குட்டிக்கு இந்தக்காட்சி பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலிருந்தது. ஓடிச் சென்று அவனும் ஒரு அழகான நீலநிற நைலக்ஸ் சேலையை வாங்கிக் கொண்டு, மின் வேகத்தில் வீட்டை நோக்கி நடந்தான். அவனுக்கும் வெகு தூரத்திற் கப்பால் அவனுடைய மனம் துள்ளிக் குதித்தபடி போய்க் கொண்டிருந்தது.

காளிக்குட்டி வீட்டை நெருங்கும் போது அங்கே வீட்டுக்குள்ளிருந்து வந்த ஒப்பாரிச்சத்தம் அவனை ஒருகணம் ஸ்தம்பிக்கச் செய்தது. செண்பகத்தின் தாய் தான் ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தாள்.

"மூன்று புள்ளைகளும் போதும், உண்ட குடும்ப நிலைமைக்கு இனிமே ஒண்டும் வேணாமெண்டு சொன்னனே மகளே எல்லாப் புள்ளைகளையும் எனக்கிட்ட ஒப்படைச்சிப் போட்டு நீ தெய்வமாப் பொயித்தியே ராசாத்தி!"

இதைக் கேட்டதும் காளிக்குட்டி கையிலிருந்த சேலையைத் தூக்கிப் பிடித்தபடி வீட்டுக்குள் ஓடினான். அங்கே பிரசவத்தின் போது இறந்து போன பிள்ளையும், தாயும் கிடந்த பரிதாபமான கோலத்தைக் கண்டதும் காளிக்குட்டி பைத்தியம் பிடித்தவனைப் போல கையிலிருந்த நீலநிற நைலக்ஸ் சேலையை செண்பகத்தின் மீதுவிரித்துப் போட்டு விட்டு இருகைகளாலும் தலையில் அடித்தடித்துப் பலமாகக் கத்திக் கொண்டு நின்றான்.

(யாவும் கற்பனை)

## கவிஞர் தம்பதிகளை வாழ்த்துகிறோம்

சிறைமீண்ட, செம்மலும் தமிழீழத்தின் ஆஸ்தானக் கவிஞரும், சுடரின் பிரதம ஆசிரியருமான உணர்ச்சிக் கவிஞர் அவர்கள் கடந்த 6— —79ல் திருநிறைச் செல்வி சரோஜினிதேவிஅவர்களை கரம்பிடித்து தன் இல்லத்துணைவி யாக்கிக்கொண்டார்.

கவிஞர் தம்பதிகளை மிக நீண்ட காலம் இனிமையுடன் வாழ்ந்து தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும், தமிழ் மண்ணுக்கும் சேவை புரிய இறையருளை வேண்டி சுடர் வாசகர் சார்பில் வாழ்த்துக்கூறுகிறோம்.

— சுடர் ஆசிரியர் குழு

## அழிந்துபட்ட இலக்கியங்கள்

சங்க காலத்தையும் அதை மருவிய காலங்களிலும் எழுதப்பட்ட பல இலக்கிய நூல்கள் இப்போது அழிந்தொழிந்து விட்டன. உள்ளவற்றிலும் சில பகுதிகளே எஞ்சியிருக்கின்றன.

ஐம்பெரும் காப்பியங்களில் வளையாபதி, குண்டலகேசி ஆகிய இரு சமண காவியங்கள் இப்போது இல்லை.

முத்தொள்ளாயிரம் சேர சோழ பாண்டிய மன்னர்கள் ஒவ்வொருவரினதும் புகழைத் தனித்தனி முந்நூறு வெண்பாக்களில் பாடும் மொத்தம் தொள்ளூறு வெண்பாக்களைக் கொண்டது. இந்நூலில் ஏறக்குறைய நூறு செய்யுட்கள் மட்டும் இப்போது கிடைக்கின்றன.

இதே காலத்தைச் சேர்ந்த, ஆனால் இப்போது கிடைக்காதஇன்னொரு நூல், "தகடூர்யாத்திரை" என்பது. சங்க காலத்தின் பிற்கூற்றில், சேர மன்னனுக்கும் தகடூரைச் சேர்ந்த அதிகமான் என்பவனுக்கும் இடையே நடைபெற்ற போரைப்பற்றி இந்நூல் கூறுகின்றது.

பெருந்தேவனாரின் பாரதத்தில் ஒரு சில பகுதிகளே இப்போது கிடைக்கின்றன.

(தென் இந்திய வரலாறு)

# இலக்கியத்துறையின் இன்றைய மாற்றம்

திருமலை. இராசரத்தினம்

இலக்கியமென்பது ஒரு இலக்கை அடிப்படையாகக் கொண்டது. இவை பல்வேறு காலங்களிலும்; பல்வேறு நோக்கங்களுக்கு மேற்ப தமது உருவ நிலையில் மாறுபாடடைந்து வளர்ச்சியும், பொலிவும் பெற்று வருகின்றன. பழைய இலக்கியத்துடன் தற்கால இலக்கிய முறைகளை ஒப்பிட்டு நோக்கின் இவ்வுண்மை புலனாகும்: படிப்படியாக காலத்திற்குக்காலம் உருவ மாற்றத்திலும் அதன் பெறுமானத்திலும் வேறுபாடுற்று வளர்ச்சியடைந்த இலக்கியமானது தற்போது ஒரு பரிணாம வளர்ச்சியடைந்து 'மக்கள் இலக்கிய'மாக மகோன்னத நிலைபெற்று விளங்குகின்றது. மக்கள் எழுத்தாளர்கள் மக்களுக்காகவே எழுதத் தொடங்கியிருக்கும் இக்காலம், இலக்கியவுலகின் ஒரு பொற்காலமாகும். ஆசாடபூதித்தனமான எழுத்தைத் துறந்து எதையும் திட்டமாக துணிவுடன் வரையறுத்துக் கூறவல்ல புரட்சிகர முற்போக்கு எழுத்தாளர்கள் மிகுந்த இக்கால கட்டத்தில்......

பழையன போய் புதியனமிகுந்து, பழங்கால நம்பிக்கை, ஐதீகக்கொள்கைகள் அறவேயற்று புதிய கொள்கைகளும், புதுமையான கருத்துக்களும் இலக்கியத்தில் புத்துயிர் பெறும் இக்காலம் புதுமுறைச் சமுதாயத்தின் பொற்காலமென இலக்கிய வல்லுனர்களாற் கணித்தறியப்பட்டுள்ளது. புதுமுறை இலக்கியத்தின் நவயுகச் சிற்பிகள் இலக்கிய வானின் மேற்பரப்பில் துருவ நட்சத்திரமாக ஒளிர் விட்டுப் பிரகாசிக்கும் இன்றைய நிலை இனிதே வரவேற்கப்பெறும் இவ்வேளையில் இன்றைய இலக்கியத்தின் பெறுபேறுகள் அலசியாராயப்படுவதும் அவசியமானதே! பல நூறு வருடங்கள் பின்நோக்கிப் பார்த்தால்...

சங்ககால இலக்கியங்கள் தோன்றிய அந்நாட்களில் பண்டைய இலக்கியங்கள் யாவும் மன்னர்களால் ஏற்றிப் போற்றப்பட்டன. அக்காலகட்டத்தில் புலவர்களை மன்னர்களே வளர்த்தனர். முடியுடை வேந்தர்கள் பலரும் இலக்கியத்தை இனிதேவளர்த்தமைக்குச் சான்றாக இன்றும் பல இலக்கியங்கள் நம்மிடையே உண்டு. உதாரணத்திற்காக இங்கேயொரு கம்பராமாயணத்தைக் குறிப்பிடலாம். வால்மீகியினால் வடமொழியில் உருவாக்கப்பட்ட இராம கதையை குலோத்துங்க சோழனின் வேண்டுதலின் பேரில் கம்பர் தமிழில் மொழி பெயர்த்தார். இது கம்பராமாயணம் என வழங்கப்படுகிறது.

மன்னர்களின் பெருமைகள், அவர்கள் கடைப்பிடித்த அரசியல் நீதி நிர்வாக முறைகள், அந்தநாட்டின் பொருளாதார மேம்பாடுகள் — இன்னும் எத்தனையெத்தனையோ புலவர்களால் போற்றிப்பாடப்பட்டன. அந்நாட்களில் தமது பெருமைகளை உலகறியச் செய்யவும், எதிர்காலச்சந்ததிகள் மத்தியில் தமது பெயர் நிலைத்து நிற்பதற்கும் ஒரு கருவியாகவே மன்னர்கள் புலவர்களைப் பயன்படுத்தினார்கள் எனினும் மிகையில்லை.

இதற்காக ஆஸ்தான புலவர்கள் பலரி அரசர்களால் அவைகளில் நியமிக்கப்பட்டு, சேவைக்கு ஊதியமாக பொற்காசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். சுருங்கச் சொன்னால், புலவர்களை மன்னர்கள் வளர்த்தனர். புலவர்கள் தமிழையும், தமிழிலக்கியத்தையும் வளர்த்தனர். இங்கே தனிமனிதனுக்குத் துதிபாடுகின்ற பாரம்பரியமானதொரு நிலை ஏற்பட்டிருப்பது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. இடைக்காலத்தையெடுத்துப்பார்த்தாலும் அங்கும் இதே போன்றதொரு நிலையைத்தான் காணக்கூடியதாக விருக்கும்.

இடைக்காலத்தில்......

மன்னராட்சியின் மகத்துவம் மெல்ல, மெல்ல மங்கத் தொடங்கிய போது வள்ளல்கள் புலவர்களை வளர்த்தனர். வள்ளல்கள் பலரி புலவர்கள் வாயிலாக, அவர்தம் இலக்கியங்களின் மூலமாக தமது புகழையும், பெருமைகளையும் நிலைநிறுத்திச் சென்றனர். இதனால் அவர்களும் வளர்ந்தனர்; கூடவே

தமிழும்... தமிழிலக்கியமும் வளர்ச்சிபெற்றது.

சடையப்பவள்ளல், சீதக்காதி போன்ரேர் மறைந்து விட்டனர். ஆனல் அவர்களின் ஆதரவில் வளர்ந்த புலவர்களின் பயனுல் மேற்போந்த வள்ளல்கள் இறந்தும் இறவாப் பெருநிலை பெற்றவர்களாக இன்றும் பல இலக்கிய நூல்களில் வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள். தனியொரு மனிதனுக்குத் துதிபாடுகின்ற நிலைபோய்; இன்று மக்களிலக்கியம் மேம்பட்டு நிற்கிறது. இன்றைய இலக்கியத்தை மக்கள் வளர்க்கின்றனரென்று கூறும்போது; மக்கள் வளர்க்கும் இலக்கியம் மக்களது பிரச்சினைகளை யதார்த்தமாக ஊடறுப்பதாகவே இருக்கிறது. இன்றைய எழுத்தாளர்கள் தனி மனிதனுடைய பொருளாதார சமூக ஏற்றத்தாழ்வுகள், சமூகத்தைச் செல்லரித்துக் கொண்டிருக்கும் அடிப்படையான ஏற்றத்தாழ்வுகளை மையமாக வைத்து கதை புனைய முனைகின்றனர்.

பழங்காலச் சமூக அமைப்பு முறைகளினுலும்; ஐதீகமென்று சொல்லப்படும் ஆணிவேரில்லாத பழைய பத்தாம்பசலித்தனமான நம்பிக்கைகளாலும் எமது சமுதாயத்திடையே நிலவிக் கிடக்கும் சாதிவேறுபாடுகளை அக்குவேறு, ஆணிவேருக அகழ்ந்தெறிந்து புதியமுறைச் சமுதாயத்தை தோற்றுவித்து, அதில் ஓரளவு வெற்றியுமீட்டித் தந்திருக்கிருர்கள் என்று கூறுவது சாலவும் பொருத்தமானதே. பிற்போக்குத் தனமான கொள்கைகளை விடுத்து முற்போக்குக் கருத்துக்களை இலக்கியத்திலே புகுத்தி வெற்றி கண்டிருக்கும் இன்றைய எழுத்தாளர்கள் மக்கள் எழுத்தாளர்களேயாவர். இவர்கள் படைக்கும் இலக்கியம் மக்களிலக்கியம் எனப்படும்.

சமூகத்திலே புரையோடிக் கிடக்கும் சீர்கேடுகளை செப்பனிட்டு ஒரு புதிய முறைச் சமுதாயத்தை தோற்றுவிக்கும் சீரியபணியில் ஈடுபட்டுவரும் இவர்களது இலக்கியங்கள் இலக்கியவுலகில் நிலையான தாக்கத்தையேற்படுத்துவதோடு; எதிர்காலச் சந்ததிகள் ஒரு திட்டமான பயனைப்பெறவும் வழிவகுத்து நிற்கின்றன.

1958 ம் ஆண்டுக்குப்பின் இரு வேறுபட்ட இனங்களினடயே ஏற்பட்ட மாற்றம் இந்நாட்டை இரண்டு விதமான நிலைகளுக்கு வழிமொழிகிறது. தேசிய உணர்வுகளுக்கு ஒரு சாரார் முக்கியத்துவம் கொடுத்த அதேவேளையில்...

இனம், சமூகம், மொழி—என்பனவற்றையும் அடிப்படையான விடுதலை நோக்கினையும் கொண்டு இருவகையான இலக்கியப்படைப்புகளைப் புனைய எழுத்தாளர்கள் முன்வந்தனர்.

தேசிய ஒற்றுமையின் அடிப்படையில்தான் மக்களிடையே நிலவும் சீர்கேடுகளை நிவர்த்தி செய்ய முடியும், மக்களை ஒன்றிணைத்துப் புதிய அமைப்பு முறையைத் தோற்றுவிக்கலாம்—என்று தேசிய உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதிவருபவர்களுக்கு மத்தியில்...

சாதி, மத, பேதங்களினுல் பிளவுபட்டிருக்கும் மக்களுக்கு அவர்களின் தேவைகளுக்கேற்ப ஊக்கம், உத்வேகமளித்து அப்படியான மக்களின் அபிலாஷைகளைப் படம் பிடித்து அவர்களின் சமுதாய மேம்பாட்டிற்காக அடிப்படையான விடுதலை நோக்கை மையமாக வைத்து (தமிழர் விடுதலைக் கூட்டணியின் தனி நாடு இலட்சியமாகவும் இருக்கலாம்) இலக்கியம் புனைபவர்களும் இலக்கியவுலகில் பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளார்கள்.—இந்த இருவேறு சாராருடைய இலக்கியங்களையும் சீர்தூக்கிப் பார்த்து ஒரு முடிவுக்கு வருவது மக்களுடைய கையில் விடப்பட்டிருக்கிறது. சாதி, சமூக அமைப்பு முறைகளில் பிளவுபட்டிருக்கும் மக்களின் தற்கால வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பொறுத்தே இதன் பெறுபேறுகள் அமைகின்றன.

இதே வேளையில்; மக்களின் பிரச்சினைகளை ஆவேசமான முறையிற் சுட்டிக்காட்டி அதற்கான வழிமுறைகளிலும் அதேவிதமான பதிலைப் புலப்படுத்துவதில் எழுத்தாளர்கள் முன்வந்தனர். முற்போக்கு எழுத்தாளர்களென்று சொல்லப்படுபவர்கள் குலம், காணி, சாதி முறைகளைச்சாடி பலாத்காரமான முடிவுகளை தங்கள் கதைகளிலே விளக்கிக் காட்டினர்.

தொன்று தொட்டு இன்றுவரை சமுதாயத்திலே நிலவிக்கிடக்கும் சாதிப்பாகுபாடுகள்; நிலவுடைமைப் பிரபுக்களின் தான்தோன்றித்தனமான செயல்கள் போன்றவற்றைப் பெரிதாகச்சாடி மக்கள் மத்தியிலே ஒரு நிலையான விழிப்புணர்வைத் தோற்றுவிக்க இன்றைய முற்போக்கு எழுத்தாளர்கள் முனைந்து வருகின்றனர். விடுகதைகளையும், விரசமான இலக்கியங்களையும் படித்து வீணே பொழுது போக்கி வந்த மக்கள் மத்தியில் சமுதாயச் சீர்கேடுகளை மையமாக வைத்து எழுதப்பட்ட இவர்களதுஇலக்கியப்படைப்புக்கள் நிறைந்த தாக்கத்தை ஏற்படுத்துவனவாய் அமைந்தன. பண்டைக்கால விக்கிரமாதித்தன்; மதன காமராஜன் போன்ற சுவாரசியமான; வெறுமனே பொழுது போக்குக்காக எழுதப்பட்ட கதைகளை படிப்பதை விடுத்து சமுதாய முன்னேற்றத்தை; தேசஅபிவிருத்தியை வைத்து எழுதப்பட்ட கதைகளைப் படிப்பதில் மக்கள் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

இன; மொழி; விடுதலை உணர்வுகளைப் பிரதிபலித்து எழுதும் ஆக்கங்கள் எழுதுபவரின் எண்ணங்களை; அவர்கள் சார்ந்திருக்கும் சமூகங்களை; கொண்டிருக்கும் அரசியல் ரீதியான கொள்கைகளை அடிப்படையாகக்

கொண்டு முற்றுப்பெறுவதால் ஒவ்வொரு வரினதும் ஆக்கங்களும் பல்வேறு கொள்கைகளை; பல்வேறு தரப்பட்ட முடிவுகளை வெளிக் கொணருவனவாய் அமைகின்றன. இத்தகைய எழுத்தாளர்கள் தமது இலக்கியங்களின் மூலமாக சுட்டிக்காட்டும் பிரச்சினைகள் அவற்றிற்குத் தீர்வுகாணும் முறைகள் போன்றவை மக்கள் மத்தியில் காரசாரமாக அலசி விவாதிக்கப்படுகின்றன.

மக்கள் மத்தியில் தமது இலக்கியங்கள் பெறும் வரவேற்பு எத்தகையதென்பதை அறிவதிலேயே இலக்கிய கர்த்தாக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஒருவரது இலக்கியங்கள் மக்கள் மத்தியில் எத்தகைய தாக்கத்தையேற்படுத்தியிருக்கின்றன என்பதைப் பொறுத்தே அந்த எழுத்தாளனது இலக்கிய உயர்வும்; புலமையும் பெரிதுபடுத்தப் படுகின்றன.

ஒரு கதையுருவாகி அது வெளிவரும் வரையில்தான் அந்தக்கதைக்கு அதையெழுதிய எழுத்தாளன் உரிமை கொண்டாடமுடியும். அது அச்சுக்குப்போய் 'இலக்கியம்—என்ற பெயரில் ஒரு மொத்தவடிவம் பெற்று மக்கள் சந்தைக்கு வந்து விட்டால் அதையெந்த நோக்கிலும்; எந்தவிதமான கோணத்தில் விமர்சித்துப் பேசவோ அல்லது எழுதவோ மக்கள் பூரண உரிமைபெற்றவர்களாகி விடுகிறார்கள். இதன் பிறகு—

தமது இலக்கியங்களுக்கு மக்கள் தரும் வாழ்த்தொலிகளையும்; வசைமொழிகளையும் இன்முகத்துடனேற்க ஒரு எழுத்தாளன் சித்தமாகி விடுகிறான். இந்த அடிப்படையில்தான் பல்வேறுதுறை எழுத்தாளர்களினது ஆக்கங்கள் இன்று மக்களால் காரசாரமாக விவாதிக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு கோணங்களிலிருந்தும் எழும் கேள்விக்கணைகளுக்கு அந்த இலக்கிய ஆசிரியன் நிச்சயமாகப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறான். ஒரு குறிப்பிட்ட இலக்கியத்தை மக்கள் ஏற்றுக்கொள்கிறார்களோ; அன்றி நிராகரிக்கிறார்களோ என்பது வேறு பிரச்சினை. ஆனால்; அந்த இலக்கியத்தைப்பற்றியெழும் எந்தவிதமான கேள்விக்கணைகளுக்கும் அதையெழுதிய எழுத்தாளன் பதில் சொல்லக்கடமைப்பட்டிருக்கிறான். ஏனெனில்... பழைய முறை காலாவதியாகி இப்போது மக்களிலக்கியங்கள் மக்கள் எழுத்தாளர்களால் மக்களுக்காகவே எழுதப்படுகின்றன.

மலைநாட்டில் குடியேறிய தமிழர்களிடையேயும் தொழிற்பிரச்சினைகளை முன்வைத்து இலக்கிய உருவாக்கங்கள் வெளிக்கிளம்பின.

தெளிவத்தையோசப்; இர. சிவலிங்கம்; திருச்செந்தூரன் போன்றவர்கள் இத்தலை முறைகளுக்கு வழிகாட்டியாயிருந்தனர். மலையகச் சூழல்களையும்; அங்கு உதிரத்தை நெற்றி வியர்வையாகச் சிந்தி உண்மையான உழைப்பை உரமிட்டு வாழும் தோட்டத் தொழிலாளர்களின் இன்னல்களையும் தமதிலக்கியங்களில் இவர்கள் அப்பட்டமாகப் படம் பிடித்துக் காட்டினர்.

அப்போதிருந்த தோட்டத்துரைமார்களின் எதேச்சாதிகாரமான போக்கையும்; தேயிலைத் தோட்டங்களிலே உதிரத்தை உறிஞ்சவல்ல ஒருவகை அட்டைப்புழுக்களைப் போல இவர்கள் கூலித்தொழிலாளர்கள்மேற் பிரயோகித்த அதிகார வெறிகளையும்; இழைத்த இன்னல்களையும் தமது ஆக்கங்களிலே வன்மையாகச் சாடினர். பொருளாதாரம்; சமூகம்; கல்வி போன்றவற்றில் மிகவும் தாழ்ந்த நிலையிலிருக்கும் தோட்டத் தொழிலாளர்களின் விமோசன விடிவுக்காகப் புனையப்பட்ட இவர்களது ஆக்கங்கள் காலகெதியில் அவ்வப்பகுதிகளிலே பெருத்த மாறுதலைத் தோற்றுவித்தன.

இதே வேளையில்......

திரிபுவாதம்; மாரீச இலக்கியம்—என்னும் புதிய சுலோகங்களும் இலக்கிய வாதிகளிடையே காரசாரமாக அலசப்பட்டன.

கடந்த காலத்தில் சஞ்சிகைகளுக்கிருந்த இறக்குமதித்தடை ஈழத்தின் இலக்கியத்துறை வளர்ந்து; விரிந்து பயனுள்ள ஆக்கங்களைத் தந்துதவ முன்வந்தது. வடக்குப்பகுதியிலே... கனகசெந்திநாதன், வரதர். சொக்கன் போன்றோரும்; கிழக்குப்பகுதியிலே... வ. அ. இராசரத்தினம், எஸ். பொன்னுத்துரை(எஸ். பொ.) போன்றோரும் இம்முயற்சிக்குப் பெரிதும் உறுதுணையாயிருந்தனர். இவர்களது இலக்கியப்படைப்புகள் ஈழத்தின் இலக்கியப்பரப்பில் புதியதொரு மறுமலர்ச்சியை உருவாக்கக் காரணமாயமைந்தது. இக்காலகட்டத்திலெழுந்த புதிய பல இலக்கியப்படைப்புக்கள் சமுதாயத்திலே புரையோடிய சீர்கேடான தன்மைகளையும்; அவலங்களையும் ஆவேசத்துடன் எதிர்ப்பனவாக அமைந்ததுடன் சமுதாயத்தின் வழிகாட்டல்களாகவும் அமைந்தன.

இன்றைய இலக்கியம் மக்களுக்காக; மக்களால் மக்களின் பிரச்சினைகளை ஊடறுத்து வெற்றிகாணும் அரிவாளாகப் புனையப்படுகின்றன. இந்த நிலை ஈழத்தின் இலக்கியத்துறையில் எழுச்சியையும்; நிலையான ஏற்றத்தினையும் கற்பிக்க ஏதுவாக அமைந்ததுடன் எதிர்காலச்சந்ததிகள் படித்துப் பயனடையப் போதுமான காரணிகளாகவும் விளங்குகின்றன.

இது இன்றைய இலக்கியத்தின் நிலை.

இத்தகைய இலக்கிய ஆக்கங்கள் மக்களின் பிரச்சினைகளுக்கு விடிவுகளைத் தருமென்பதில் நிச்சயம் இலக்கியவுலகம் பெருமைப் படவேண்டும்.

# சிந்தை கவரும் சித்தர் பாடல்கள்

— கி. கலாமோகன் —

தமிழ் இலக்கியப் பரப்பிலே சுவை பல நல்கும் கருத்தாழமிக்க கனிகளாகத் திகழ்பவை சித்தர் பாடல்களாகும். இவை இலக்கியச் சுவைஞர்களால் பெரிதும் விரும்பிப் போற்றப்படுகின்றன. இவர்களது பாடல்களில் உள்ள தெளிவு, உண்மை என்பன மக்களை பகுத்தறிவுக் கண்ணோட்டத்தில் சிந்திக்க வைத்தன. புரட்சிகரமான ஆன்மீகக் கருத்துக்கள் நிரம்பி வழிகின்றன. மருத்துவம், சோதிடம், ஆன்மீகம் போன்ற துறைகளில்—சித்தர்கள் வித்தர்களாக இருந்துள்ளார்கள் என்பதை வரலாற்றிலிருந்து அறிய முடிகின்றது.

மூலிகை வைத்தியத்தின் மூலநாயகர்களாகத் திகழ்பவர்கள் சித்தர்கள். அதனால் தான் "சித்தர் வைத்தியம்" என்ற பெயருடன் அது இன்றுவரை மக்களால் உவப்போடு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. சித்தர்கள் வகுத்த கடவுட் கொள்கை, இக்கால புரட்சிகர சிந்தனையுள்ளோர்க்குக் கைகொடுக்கும் ஒன்றாகவே திகழ்கின்றது. பல சித்தர்கள் இருந்தபோதும் பதினெண் சித்தர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். சிவவாக்கியார், பட்டினத்தார், பாம்பாட்டிச் சித்தர், அழகுணிச்சித்தர், அகப்பேய்ச்சித்தர் என்போர் அவர்களுட் சிலர். மக்களை மயக்காது, மகிழ்வித்து அறிவைப் பெருக்கும் சித்தர் பாடல்களின் சுவைகளையும், கருத்துக்களையும் கீழே காண்போம்.

சிவனிடம் பற்றுக் கொண்டவர் சிவவாக்கியார் என்னும் சித்தர். இவர் சமயத்தின் பேரால் நடைபெறும் மூடக்கொள்கைகளைக் கண்டிப்பதில் முன்னுக்கு நிற்கின்றார். விக்கிரக ஆராதனையை அடியோடு வெறுக்கின்றார். வாழ்க்கை நிலையாமையை ஆணித்தரமாக எடுத்தோதுகிறார். விரதங்களின் போலித் தன்மையைக் கோடிட்டுக் காட்டுகிறார்.

அக்காலப்பகுதியில் இவர் செய்தது 'மாபெரும் புரட்சி' என்றே கூறவேண்டும்.

இறைவனைத்தேடி கல்லும் முள்ளும் நிறைந்த காடுகளையும், மலைகளையும் தேடிச் சென்று அலையும், பக்தகோடிகளைப்பார்த்துச் சிரிக்கின்றார் சித்தர்.

'உன்னுள்ளே தான் இறைவன் இருக்கின்றான்' என்ற கருத்தை மையமாக வைத்து மறுகணம் பாடத்தொடங்குகின்றார்.

"தூரம்தூரம் தூரமென்று சொல்லுவார்கள்
சோம்பர்கள்
பாரும்விண்ணும் எங்குமாய்ப் பரந்தஅப்
பராபரம்
ஊரும்நாடும் காடுமோடி உழன்றுதேடும்
ஊமைகாள்!
நேரதாக உம்முளே அறிந்துணர்ந்து நில்லுமே!"

அவர் மேலும் பாடுகிறார்.

"கோயிலாவ தேதடா? குளங்களாவ தேதடா?
கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே!
கோயிலும் மனத்துளே[ குளங்களும் மனத்துளே!
ஆவதும் அழிவதும் இல்லையில்லை யில்லையே!"

ஆலயம் ஒன்று. அதற்கு முன்னால் தேரிலே ஆண்டவனுடைய விக்கிரகத்தை வைத்து வடத்தைப்பிடித்துப் பக்தர்கள் இழுக்கிறார்கள்.

இவைகளைக்காணுகின்றார் சிவவாக்கியார் அவ்வளவுதான், அவரது புரட்சியுள்ளம் துடிக்கின்றது. கவியொன்று வெடிக்கின்றது.

"ஊரிலுள்ள மனிதர்காள் ஒருமனதாய்க் கூடியே
தேரிலே வடத்தைவிட்டு செம்பைவைத்து இழுக்கிறீர்
ஆரினாலும் அறியொணாத ஆதிசித்த நாதரைப்
போரிலான மனிதர்பண்ணும் புரளிபாதம் பாருமே!'

அடுத்து பட்டினத்தாரின் கருத்துக்களை நோக்குவோம். இன்பத்தில் மிதந்த ஒருவன் இறந்துவிட்டான். அவனைக் கட்டித்தழுவி இன்பம் கொடுத்த மனைவியும், அவரது அரவணைப்பில் வாழ்ந்த பிள்ளைகளும், பூதவுடலைச்

சுற்றி நின்று ஊரே அதிரும் வண்ணம் ஒப்பாரி வைக்கின்றனர். சுடலை மட்டுமே வந்தனர். அதற்குப்பின்...... உடல் தியாலே கருகியது. உறவுகள் உலகுக்குத் திரும்பின. இக்காட்சி பட்டினத்தாரின் உள்ளத்தை உறுத்தியது. அந்த உறுத்தலின் விளைவு.

"கட்டியணைத்திடும் பெண்டிரும் மக்களும் காலத் தச்சன்
வெட்டி முறிக்கும் மரம்போல்சரீரத்தை வீழ்த்தி விட்டால்
கொட்டி முழக்கி அழுவர் மயானம் குறுகி யப்பால்
எட்டியடி வைப்பரோ இறைவா கச்சி யேகம்பனே!"

பட்டினத்தாரைப் பாசமெல்லாம் கொட்டி வளர்த்த அன்னை மாண்டு விட்டாள். துறவியாக இருந்தபோதும் அவரது பாச உணர்வுகள் பீறிட்டன. அந்தப் பீறிடலின் நிலையால் எழுந்தபாக்கள் இதயத்தை உருக வைக்கும் தன்மை வாய்ந்தன. அதில் ஒன்று.

"அள்ளிஇடுவது அரிசியோ? தாய் தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனே கடகாமல்?—மெள்ள
முகமேல் முகம் வைத்து முத்தாடி—"என்றன்
மகனே" என்றழைத்த வாய்க்கு"

பெண்ணாசையை எதிர்க்காத சித்தர்களே இவ்வுலகில் இல்லையெனலாம்.

"பெண்ணாகி வந்ததொரு மாயப்பிசாசாம்" என்று பட்டினத்தாரே பாடியுள்ளார்.

பாம்பாட்டிச்சித்தர் என்னும் ஒரு சித்தரும் இது விடயத்தில் முனைப்பாகவே நிற்கின்றார். அவரது அந்த முனைப்பினை வெளிப்படுத்தும் பாடலொன்று வருமாறு.

"வெயில்கண்ட மஞ்சள்போன்ற மாதர் அழகை
விரும்பியே மேல்விழுந்து மேவு மாந்தர்
ஒயில்கண்டே இலவுகாத்து ஓடும் கிளிபோல்
உடல்போனால் ஓடுவாரென் றூடு பாம்பே!

இன்னொரு சித்தர்.

அவருடைய பெயர் உலோகாயதச்சித்தர்.

இவருடைய பாடல்களில் மனிதன் மிகவும் உந்நதமாகப் போற்றப்படுகிறான்.

உலகிலே மனிதனுக்குரிய பங்கையும், அவனுடைய பெருமைகளை எடுத்துக்கூறும் விதத்தையும் கீழே காண்க.

"மனிதனே சமூகத்தின் உயிருக்கு நாடி—சமய
மதங்கள் வளர்ந்தன கடவுள்கள் கோடி
மனிதனே உலகத்தின் தலைவன் —அவனே
அனைத்துக்கும் மாண்புள்ள புலவன்"

அவர் மேலும் ஏழை பணக்காரன் என்ற தாழ்வையும், சாதிப்பிளவுகளையும் சாடுகின்றார்.

புலவரின் புரட்சிகர உள்ளத்தைக் கீழ் வரும் பாடலில் காணலாம்.

"உழைக்காமல் உண்ணுவோர் தீயபாழ் உள்ளம்—இந்த
உலகத்தில் தோன்றிற்று மதமான பள்ளம்
பிழையே பிழைப்பாகச் சாதிகள் தந்தார்—மக்கள்
பேதத்தில் வாழ்வைச் சுரண்டி உவந்தார்"

இவ்வாறு சித்தர்களால் ஆக்கப்பட்ட படைப்புக்கள் எல்லாம் சிந்தையைக் கவர்ந்து சிந்திக்க வைப்பனவாகவே உள்ளன.

# வெற்றியின் இரகசியம்

விவேகானந்தர் அமெரிக்காவில் இருந்த போது, துப்பாக்கியால் குறிபார்த்து சுடும் போட்டி ஒன்றைப் பார்க்கப் போயிருந்தார்.

மேட்டிலும் பள்ளத்திலும் வளைந்து வளைந்து பாய்ந்து செல்லும் சிற்றோடையில் சிறு பந்தினைப் போட்டார்கள். நிலைத்து நிற்காமல் கணத்திற்குக் கணம் இடம் மாறும் அப்பந்தைக் குறிவைத்து ஒரே தடவையில் சுடவேண்டும். இதுதான் போட்டி.

பயிற்சி உள்ளவர்கள் பலர் அம்முயற்சியில் தோல்வி கண்டனர். பக்கத்திலே நின்று பார்த்துக் கொண்டிருந்த விவேகானந்தர், தான் சுட்டுக் காட்டுவதாகக் கூறினார்
என்ன சுவாமிக்கு துப்பாக்கி சுடும் பயிற்சி உண்டா?
அமெரிக்கர் அதிசயப்பட்டனர்.
விவேகானந்தரிடம் துப்பாக்கி தரப்பட்டது.
குறிபார்த்துச் சுட்டார். பந்து சிதைந்தது.
எல்லோரும் ஆச்சரியப்பட்டனர்.
இதற்கு முன் துப்பாக்கி சுடும் பயிற்சியுண்டா? என்று கேட்டார்கள்.
விவேகானந்தர் சொன்னார்:-
"பயிற்சி இல்லை. மனதை ஒருமுகப்படுத்தினேன். குறிதவறவில்லை."
மனம் ஒருமுகப்பட்டால் தோன்றும் சக்திக்கு மேற்படி சம்பவம் ஓர் எடுத்துக்காட்டு.
இன்று 'தமிழ் ஈழத்தை'யே குறியாகக் கொண்டுள்ள நாம் எம்மனதை ஒருமுகப்படுத்தி போராட தயாராயில்லையே!

"கண்ணன்—தென்மட்டுவில்"

# பண்டிதமணி பிறந்த மண்

## எஸ். பி. கிருஷ்ணன்

**கலாநிதி கணபதிப்பிள்ளை அவர்களின் பிறந்த தினத்தை (ஆனி 27) முன்னிட்டு இந்நினைவுக் கட்டுரை இடம் பெறுகிறது.**

படித்தோர்க்கும், பண்டிதர்க்கும் பண்டிதராக விளங்கியவராதலால் பண்டிதமணி என்ற சிறப்புப் பெயர் பெற்ற கலாநிதி சி. கணபதிப்பிள்ளையவர்கள் மட்டுவிலூரில் பிறந்தவர்.

"ஈன்ற பொழுதிற் பெருதுவக்கும், தன் மகனை சான்ருேன் எனக் கேட்ட தாய்" என்ற பொய்யா மொழிக் கொப்ப பெரிதும் மகிழ்பவள் மட்டுவில் தாய். பண்டிதமணிக்கு இலங்கைப் பல்கலைக்கழகம் அளித்த கௌரவம் தமிழுக்கு அளிக்கப்பட்ட கௌரவம் என கற்ருேரால் கொள்ளப்பட்டாலும், மட்டுவில் வாழ் மக்கள், அதனைத் தமக் களிக்கப்பட்ட மதிப்பு என உவகை கொள்ளும் பேறு படைத்தவர்கள்.

தமிழ் வாழ் நல்லுலகெல்லாம் தெரிந்த ம. க. வேற்பிள்ளையவர்களும், மகாலிங்கசிவம் அவர்களும் முத்து உபாத்தியாயர் அவர்களும் தோன்றிய மண், மட்டுவில் மண். பழம் பெரும் பன்றித்தலைச்சியம் மன் சந்திரமௌலீசர் சிவன். தாளையம்பதி அம்மன், வேரற்கேணி கந்தன் போன்ற சைவத்தலங்களை தன்னகத்தே கொண்டது மட்டுவில்.

மங்காப் புகழ் படைத்த மட்டுவிலூரில் கலாநிதி கணபதிப்பிள்ளையவர்கள், எங்கள் காலத்தில் தோன்றியமை, நாம் பெற்ற பாக்கியம்; அவர் நீடூழி வாழ்க வென்று, அவர் பிறந்த இந்நந்நாளில் நாம் வாழ்த்துவோமாக.

பண்டிதமணியைப் பண்பாளராக, சான்ருேனைக் கண்ட, படித்தவர்கள் பலர், அவர் பற்றி பலவாறு புகழ்ந்துரைக்கின்றனர்.

"பண்பும் பெருமையும் பேச்சும் எழுத்தும் உள்ளமும் உணர்வும் சிறந்தோங்கியவர்" என்ருர் தமிழ் மறைக்கழகத் தலைவர் கா. பொ இரத்தினம் (பா. உ) அவர்கள்.

"பண்டிதருள் மாணிக்கம், பாரதனில் பேராசான் அண்டினரை ஆதரிக்கும் அன்புருவம், ஈழத்தமிழ்ச் செல்வம், நடமாடும் நூல்நிலையம்" என மொழிந்தார் மட்டக்களப்பு பூபாலபிள்ளையவர்கள்.

"நிமிர்ந்த நிலையும், நேரிய நோக்கும், புன்முறுவல் பூத்த முகமும், இனிய குரலும், உறுதியான பேச்சும், உள்ளுணர்வின் நுண்மெய்ப்பாடுகளும், தெளிந்த அறிவும் அபூர்வமான சுவைத்திறனும் வாய்ந்தவர்" என்ருர் முன்ஞள் உதவி வித்தியாதிபதி அருணந்தி அவர்கள்.

"அறிவும் பொறையும் அருண்கலை மாண்பும், செறிவும் காட்சியும், சிவநெறிப்பண்பும், ஒண்டமிழ் ஆசிரியம் ஓங்குணர்வொடு நின்ற பண்டிதமணி "எனப் பகர்ந்தார் தமிழகத்து வச்சிரவேல் முதலியார்.

"வாழ்க்கையில் இலக்கியத்தையும் இலக்கியத்தில் வாழ்க்கையையும் கண்டவர் பண்டிதமணி" எனக் கண்டார் கலாநிதி சிவப்பிரகாசம் அவர்கள்.

"கடவுளின் வடிவு சுத்தமானது. அதற்கு நீதி என்று பெயர். நீதி வெகு ஆழமானது. அது நீளமானது. வஞ்சகம் நரகத்திற்கு வித்து. சிவம் என்ருல் நன்மை மங்களம் நீதி என்று பொருள். நீதியோடு சம்பந்தப்பட்டவன் சிவத்தோடும் சம்பந்தப்பட்டவன் அன்பு வளர வளரப் பாவம் தேயும். அன்பு கனிந்த நிலையில் அருள் ஆகும்."

இவை கலாநிதி கணபதிப்பிள்ளையவர்களின் தத்துவமுத்துக்கள்.


இன்றைய பண்டிதமணி கலாநிதி கணபதிப்பிள்ளையவர்கள் எங்கள் சொத்து அல்லர். அவர் தமிழுலகிற்கு சொந்தமானவர் என்பது சான்ருேர் முடிவு.

> "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
> வான்புகழ் கொண்ட தமிழ் நாடு"

என இறும்பூதெய்தினர் பாரதியார்.

"கலாநிதி, பண்டிதமணி என்ருெரு தமிழ் மணியை தமிழ் உலகிற்கு தந்து மேன்மை கொண்டது மட்டுவில்" என்று நாம் உவகையடைகிருேம்.

# ஒரு புதிய பாதை உருவாகின்றது



எஸ்.சிவகுமாரன்

வெய்யில் சிறிது சிறிதாக விலகிப் போய்க்கொண்டிருந்தது. இந்த உலகின் பார்வையில் இருந்து மறைந்து விட வேண்டும் என்ற நோக்கினாலோ என்னவோ சூரியன் மறைந்துவிட எத்தனித்துக் கொண்டிருந்தான், அந்த அழகான மாலைக்காட்சியை அனுபவிப்பதற்கு உண்மையிலேயே கொடுத்துவைத்திருக்க வேண்டும். ஆனால் கந்தசாமி மாஸ்டர் அதில் கவனம் செலுத்தியதாகவோ, அதை இரசித்ததாகவோ தெரியவில்லை. அவர் வேகமாக நடந்துகொண்டிருந்தார். அவர் நெஞ்சு புகைந்து கொண்டிருந்தது.

இந்தப் பிரச்சினைக்கு இன்டைக்கொரு முடிவு கட்டிப் போட வேண்டும். கந்தசாமி மாஸ்டர் மனதில் கறுவிக் கொண்டார். அவர் தேகம் படபடத்தது. கை குறுகுறுத்தது. இன்னமும் ரெண்டு விளாசி இருக்கவேண்டும் என எண்ணிக்கொண்டார்.

“மகளாம் மகள்” ‘தூ’ என்று காறி உமிழ்ந்தார் கந்தசாமி மாஸ்டர். வாயில் இருந்த சுருட்டும் கீழே விழுந்து விட்டது. வாயில் சுருட்டு இருந்தது கூட அவருக்கு மறந்து விட்டது; அல்லது மரத்து விட்டதோ தெரியவில்லை.

சுருட்டை எடுத்துப் புகையை இழுத்தார். அது அணைந்து வெகு நேரமாகி விட்டிருந்தது. அதைக்கூட அவர் கவனிக்கவில்லை. நெருப்புப்பெட்டியை எடுத்து மீண்டும் சுருட்டைப் பற்ற வைத்துக் கொண்டார். சுருட்டும் அவர் மனத்துடன் சேர்ந்து புகையத்தொடங்கியது.

கந்தசாமி மாஸ்டரின் கடைசி மகள் கமலம்... ஒரு பெண்ணுக்கும் மூன்று ஆண்களுக்கும் பின்னர் பிறந்தவள்.

“இவள் எனக்குப் பிள்ளையாய் பிறந்திருந்தால் உந்த வேலை செய்திருக்க மாட்டாள்” ஆத்திரத்துடன் குமுறினார் கந்தசாமி மாஸ்டர்.

முத்தையா மாஸ்டர் வீடு நோக்கித்தான் அவர் வேகமாக நடந்தார். “இவன் குமரேசனை தொலைத்துக் கட்ட வேண்டும்” என மனதில் கறுவிக் கொண்டார். ஏதும் பிரச்சினை என்றால் முத்தையா மாஸ்டரைத்தான் அவர் நாடுவார்.

“முத்தையா...... இவள் கமலம் செய்த வேலையைப் பார்த்தனியே... எளிய சாதிப் பயல் குமரேசன் என்னட்ட வந்து பொம்பிளை கேட்கச் செய்து போட்டாள்.”

“என்ன கந்தசாமி? என்ன விசயம்” முத்தையா மாஸ்டருக்கு சாடையாய் விசயம் விளங்கிப் போச்சுது. ஊரில் சாடைமாடையாய் குசுகுசுத்த கதைதான்.

“என்னென்டு கேட்கிறியே? கட்டினால் குமரேசனைத்தான் கட்டுவன் என்டு இவள் கமலம் நிற்கிறாள்...... அந்தளவுக்கு விசயம் முத்திப் போச்சு எளிய பயல்... இவன்ட தேப்பன் என்ட வீட்டிலை குந்து கட்டினவன், இப்ப இவன் என்ட மாப்பிள்ளையாய் வரப் போறாராம். அவனவனை அந்தந்த இடத்திலை வைக்கவேணும் என்டு என்னத்துக்குச் சொல்லி வைச்சிருக்குது? கொஞ்சம் இடம் கொடுத்ததும் பொம்பிளை கேட்க வந்திட்டினம்” ஆத்திரம் தீர வார்த்தைகளை கொட்டினார் கந்தசாமி மாஸ்டர். ஆனால் அப்படியும் அவர் ஆத்திரம் தீரவில்லை.

“முத்தையா உவன் குமரேசனை ஊரை விட்டே துரத்திப் போட்டுத்தான் இனி அடுத்த வேலை.”

“முத்தையா மாஸ்டர் மௌனமாக சிந்தனையில் ஆழ்ந்தார். ஆனால் கந்தசாமி மாஸ்டர் அமைதி இன்றிக் காணப்பட்டார். அவர் மனோநிலை முத்தையா மாஸ்டருக்குப் புரிந்தது.

“கந்தசாமி ஏன் பதட்டப் படுகிறாய்; கொஞ்சம் அமைதியாய் இரு... குமரேசன் உன்னட்ட வந்தவனே.”

“வீட்டை வரேக்க காலை முறிச்சு அனுப்பியிருப்பன், பரதேசிக்கு பொம்பிளை கொடுத்தாலும் கீழ்சாதிக்கு பொம்பிளை குடுக்கன் என்டதும் எழும்பிப் போட்டான்.”

“கமலம் என்னவாம்.”

“அவள் என்ன சொல்லுறது... என்டை ஆத்திரம் தீர குடுத்திட்டுத்தான் வாறன் அந்த குமரேசனைப் பற்றி அவள் கதைச்சால் கொலை தான் விழும்.”

“கமலம் விரும்பிறமாதிரி குமரேசனை அவளுக்கு கலியாணம் முடிச்சு வைத்தால் என்ன?” கந்தசாமி மாஸ்டர் கனவிலும் எதிர்பாராத கேள்வியை தொடுத்தார் முத்தையா.

“என்ன?......” பதறியபடி எழுந்தார் கந்தசாமி மாஸ்டர்.

"பொறுமையாய் இரு ந்சதசாமி, அவளின்ட சந்தோகத்தை ஏன் கெடுப்பான்."

"என்ன முத்தையா விசர்க்கதை அலம்பிறுய்; உதைக் கேட்கவே நான் இப்ப வந்தனுன். உதுமட்டும் நடக்காது... நடக்கவும் விடன்" சீறினுர் கந்தசாமி மாஸ்டர்.

"அவளை விட அவளின்ட சந்தோசத்தைப் பற்றி யோசிக்க எனக்குத்தான் உரிமை உண்டு."

"அது உண்மையானுல் இப்போ அதற்காக என்ன செய்யப் போகின்றுய்."

"அவளை நல்ல இடத்திலை வாழவைக்கப் போறன்."

பெண்ணின் வாழ்விலே மூன்று காலப் பிரிவுகள் உண்டு. முதற் காலத்தில் காதல் கனவு காண்கிருள்; அடுத்த காலத்தில் அதுபற்றிய அனுபவத்தைப் பெறுகிருள்; மூன்ருவது காலத்தில் காதலைக் குறித்து விசனப்படுகிருள்'

—ஸெயிண்ட் ப்ராப்பர்.



"அந்த நல்ல இடம் குமரேசன் வீடாக ஏன் இருக்கக் கூடாது? அவனிடம் படிப்பு இல்லையா? பணம் இல்லையா? குணம் இல்லையா?" அடுக்கினுர் முத்தையா மாஸ்டர்.

"என்ன இருந்தாலும் அவன் கீழ்சாதி' கந்தசாமி மாஸ்டரின் குரலில் ஏளனம் ஒலித்தது.

"நீ இப்படிச் சொல்லுகின்றுய், நாளைக்கு ஊரில நான் தலைகாட்ட முடியாது, என்ட மானம் அந்தஸ்து எல்லாம் நான் இழக்கவேண்டிவரும், ஊரில ஒருத்தன்கூட என்னை மதிக்கமாட்டான்."

"ஊர் ஊர் என்டு சொல்லாதே. வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும் எள்ளி ஏளனப்படுத்துவதுதான் ஊர்; அந்த ஊருக்காக உன்ட மகளின்ட வாழ்வை நீ பலியாக்கப் போகின்றுய்?'

"நீ என்ன சொன்னுலும் அவனை மாப்பிள்ளையாக்க என்ட மனம் ஒத்துக் கொள்ளாது."

"இப்போதுதான் நீ உண்மையான காரணத்தை உன்னையறியாமல் கூறியுள்ளாய். உன்னுடைய மன இயல்பு குமரேசனை மாப்பிள்ளையாக ஏற்க மறுக்கின்றது... கீழ்சாதி மேல்சாதி என்று எண்ணி மனம் பழக்கப்பட்டுப் போய் விட்டது; இதை நீக்குவது கடினம் அல்ல, தாஞகவே அது அற்றுப் போய்விடும். உன் மகளின் நல்வாழ்க்கையை எண்ணிக்கொள்... இன்னுமொண்டு கற்பு என்பது உடலளவில் இல்லை உள்ளத்தில் தான் இருக்கின்றது என்று பள்ளிக்கூடத்தில் படிப்பிச்சதையும், மேடையில் ஏறிப் பேசியதையும் மறந்து போனுய் போல கமலத்தின் மனதில் நிறைந்திருப்பவனை விடுத்து அவள் மனதைத் திருப்பி இன்னுமொருவனை திருமணம் செய்து கொடுக்க முயற்சிக்கின்ருய், அதன் மூலம்

"ஏன் நடக்கக் கூடாது."

"என்ட சாதி என்ன? அவன்ட சாதி என்ன? ஒரு கீழ் சாதிப்பயலுக்கு என்ட மகளை கட்டிவைக்கிறது ஒருக்காலும் நடக்காது."

"அப்ப உன்ட மகளின்ட சந்தோசம்."

"கந்தசாமி நீபடிச்சவன்... சாதிகள் இல்லையடி பாப்பா என்று படிப்பிச்சவன்; சமுதாயத்தை திருத்த வேண்டிய நீ சாதி சமயம் என்று கதைக்கிறது புனிதமான ஆசிரியத் தொழிலுக்கே வெட்கக்கேடான செயல்."

## தந்தை செல்வா

தந்தை செல்வாவுக்கு தமிழில் புலமை இல்லாவிட்டாலும் சில தமிழ் சொற்களை பொருத்தமாகவும்— அழுத்தமாகவும் உபயோகிப்பதில் வல்லவர்.

உதாரணத்துக்கு சில சொற் றொடர்கள்—

'நாம் எடுத்துக்கொண்ட காரியம் வில்லங்கமானது தான். ஆனல் வேறுவழியில்லை,

'குடியேற்றத்திட்டத்தின் மூலம் தமிழினத்தை அழித்தொழிக்க சிங்கள அரசு, திட்டமிட்டு காரியமாற்று கிறதென்பது துலாம்பரமாக எமக்குத் தெரிகிறது'

அனுப்பியவர்—இளங்கோ.

உன் மகளின் கற்பை நீ பறிக்க முயல்கின்ருய் என்பதை மறந்து விடாதே... கந்தசாமி! சாதி சமய சமுதாய அந்தஸ்து என்பன போலியானவை. எமக்குத் தேவை உண்மையான சந்தோசமான வாழ்க்கை" முத்தையா மாஸ்டர் கூறி முடித்தார்.

"முத்தையா இதுகளை கேட்க நான் வரேலை, நேரமாகுதி நான் வாறன்" கந்தசாமி மாஸ்டர் எழுந்தார்.

"வீட்டை போய் யோசித்து நல்ல முடிவுக்கு வா" முத்தையா இறுதியாக கூறினர்.

கந்தசாமி மாஸ்டர் வீட்டை நோக்கி நடந்தார். அவரது நடையில் முன்பிருந்த வேகம் இல்லை.

"மாஸ்டர் உங்களை எங்கேயெல்லாம் தேடுறது... இவள் குமரேசன் வீட்டை உங்கட கமலம் போட்டாள்... அவனை வீட்டோடை சேர்த்து கொழுத்தப் போறம் மாஸ்டர்... அவ்வளவு துணிவுதானே அவனுக்கு... ராஸ்கல்" கந்தசாமி மாஸ்டரை வழிமறித்துக் கூறியது கம்பும் தடியும் கொண்ட ஒரு கூட்டம். அவருக்கு எதிர்பாராத அதிர்ச்சி தான். ஆனல் ஏனேசமாளித்து விட்டார். தன்னைச் சூழ கம்பும் தடியுமாய் நிற்பவர்களைப் பார்த்தார். கோயிலிலும் குளத்திலும் நின்று சேஷ்டைகள் செய்பவர்கள் இப்போ ஏதோ ஒரு நல்ல காரியத்தை செய்யப் போகின்றவர்கள் போல...

"டேய் யாராவது குமரேசனிலை தொட்டியள் என்டால், உங்களை உயிரோடு புதைத்துப் போடுவன்" புலியாக சீறினர் கந்தசாமி மாஸ்டர். கம்பும் தடியுமாய் நின்ற கூட்டம் பின் வாங்கியது. கந்தசாமி மாஸ்டர் தமது மகளின் வாழ்விடம் நோக்கி கம்பீரமாக நடக்கத் தொடங்கினர். அவர் மனதில் புது உறுதி ஒன்று தெரிந்தது.

(யாவும் கற்பனை)

## தீண்டாமை ஒழிப்பு மலர்

ஆவணிமாத சுடரை தீண்டாமை ஒழிப்பு மலராக வெளியிட உத்தேசித்துள்ளோம். வாசக அன்பர்களிடமிருந்து சாதி ஒழிப்பு சம்பந்தமான கட்டுரை—கவிதை விடயதானங்களை எதிர் பார்க்கிறோம். ஆக்கங்களை 1-8-79க்கு முன் அனுப்பி உதவுங்கள்.

—ஆசிரிய குழு

## மறையமுது-2

(நோக்கும், சொல்லும்)

வள்ளுவர் காலத்தலைவன் தலைவியைத் தோழியுடன் சந்திக்கிருன். தனக்குள் சிந்திக்கிருன், "நோய் நோக்கும், மருந்து நோக்குமாக இவளிடம் இரு நோக்கு உள்ளது. இவளின் கள்ளப்பார்வை காமத்தில் சரிபாதியிலும் பெரியது. யான் பார்க்கையில் இவள் நிலத்தைப் பார்க்கிருள். பார்க்காதபோது என்னைப்பார்த்து நகைக்கிருள். அன்புப் பயிர்வளர நீர் வார்க்கிருள். ஒரு கண்ணைச் சுருக்கிப் பார்க்கிருள். தோழி சில கடுஞ் சொற்களை சொன்னலும், பகையற்ற சொல் பயன்தரும். "அன்புடையார் பார்வை பகைவரின் பார்வை போன்றதே. இவள் நகைப்பதில் நன்மை உள்ளது." என்றெல்லாம் எண்ணுகிருன். பொதுப்பார்வை பார்க்கிருன். அவளும் பார்க்கிருள். "காதலர் பார்வை இத்தகையதே" என்று தோழி நினைக்கிருள். "இருவர் கண் நோக்கும் ஒத்துப் போயின. இனி வாய்ச்சொற்கள் தேவையில்லை" என்பதே தோழியின் முடிவு. இன்பத்துப்பாலில் குறிப்பறிதலில் வள்ளுவரின் சொல்லோவியத்தில் ஓர் ஓவியம் இதோ: "கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல". (1100)

"எறிகோலன்"

# பதில்கள்

## நக்கீரன்

வன்னியூர் பொ .மகேந்திரராசா.

கேள்வி: இவ்வளவு துணிச்சலாக மேடையை நடத்துபவர் யார்? யார் அந்த நக்கீரன் சுருக்கமாக பதில் அளியுங்கள்.

பதில்: இது தெரியாதா? கணக்காயனர் மகன்தான் நக்கீரன். கடைச்சங்கக் காலத்து அரங்கேறிய புலவர் நாற்பத்தொன்மரில் ஒருவர்!

செல்வி. S பாமினி, வல்லிபுரம் வளவு, வவுனியா.

கேள்வி: தலைவர் அமிர்தலிங்கம் தமிழ்நாட்டுக்கு சென்றிருந்தபோது தி. மு. க. வின் குடையின் கீழ் இளைப்பாறினார்! அந்தக்கட்சியின் காரிலேயே இடங்களுக்கு சென்றார். அவர்கள் அமைத்துக்கொடுத்த மேடையிலேயே பேசினார். ஆனால் தமிழ்நாட்டில் தி. மு. க. கட்சியினர் மாத்திரம் இல்லை. வேறுபல கட்சியை ஆதரிப்பவர்களும் கட்சி சார்பற்றவருமே அதிகமானோர். வெளியூருக்கு ஆதரவு கேட்டு செல்பவர் பாகுபாடின்றி எல்லா தமிழரிடமும் ஆதரவு கேட்க வேண்டும். அவர் தி. மு. க. கட்சியுடன் பவனி வந்தது தவறு!

இப்படி நான் சொல்லவில்லை! தமிழ்நாட்டிலிருக்கும் எனது பேனா நண்பரி சொன்னார்! இது பற்றிய தங்கள் விளக்கம் என்ன?

பதில்: அ. இ. அ. தி. மு. க. தலைவர் எம். ஜி. ஆர் அவர்களுடன் 'அமிர்' தம்பதிகள் ஒருமுறைக்கு இருமுறை விருந்துண்டார்களே? இதை உங்கள் பேனா நண்பர் கேள்விப்படவில்லையா? இன்னொன்று குழந்தையும்— தெய்வமும் கொண்டாடும் இடத்தில் என்பார்கள். யார் யார் எங்களை நெருக்கமாக அணைக்கிறார்களோ அவர்களை நாமும் உருக்கத்தோடு அரவணைப்போம். இது இயற்கை நியதி.

தி. மு. க. தலைவர்கள் கடலூர் தூயமணி—நடராஜன் இவர்களது ஈழ வருகையையும்— அ. தி. மு. க. அமைச்சர்கள் திரு. அரங்கநாயகம், ஜனாப் ராஜா முகம்மது இவர்களது வருகையையும் ஒப்பு நோக்கி உங்கள் பேனா நண்பருக்கு நீங்கள் எழுதுங்கள்!

A. சாந்தகுமார்-லிங்கம், வாரிய பொலை தோட்டம், மாத்தளை.

கேள்வி: தமிழ் ஈழக்கோரிக்கையில் அகிம்சா முறை சாத்தியப்படாமல் போய் ஆயுத போராட்டம் ஏற்படுமேயானால் இதில் மலையக இளைஞர்களின் பங்கு என்ன?

பதில்: ஆயுதப் போராட்டத்துக்கு இடமில்லை. அது வழியுமில்லை. அகிம்சைப் போராட்டங்களில் பங்குபற்றினாலே போதுமானது. அதற்குரிய சந்தர்ப்பம் விரைந்து வந்து கொண்டிருக்கிறது!

செல்வன், மா. மான்சூரியன், அச்சுவேலி, வடக்கு.

கேள்வி: "தமிழர் விடுதலைக் கூட்டணியின் போலி நடவடிக்கைகளை அம்பலப்படுத்துவதற்காகவே, நாம் கிராம சபைத் தேர்தல்களில் போட்டியிடப் போகிறோம்" என்று கூறுகிறாரே சுயாட்சி நவம்!

பதில்: இலங்கைத்தமிழர் அரசியலில் சுயாட்சி நவம் ஒரு கும்பகர்ணன்! மாநகர— நகரசபைத் தேர்தல்கள் நடக்கும் பொழுது தூங்கி இப்பொழுதுதான் விழித்தெழுந்திருக்கிறார்!

கேள்வி: தஞ்சையிலும், நாகையிலும் தமிழர் படை தோற்றதேன்?

பதில்: தஞ்சையின் தோல்விக்கு உட்பகைதான் காரணம்!

கேள்வி: அபிவிருத்தி என்ற போர்வைக்குள் ஒளிந்து கிடப்பது என்ன?

பதில்: அபகரிப்பு!

மி. அருள்மொழிராஜா, நிலாவெளி—3.

கேள்வி: "ஆண்டிலொரு நூறா? இல்லை ஐந்தோ, ஆறு தாண்டு முன்னே தமிழர்க்கோர் தனிநாடுருவாகும்" என் பதில் சந்தேகம் உண்டா?

பதில்: இல்லை! இல்லவே இல்லை!!

கேள்வி: விகிதாசார வாக்களிப்பு முறையால் எமக்கு (தமிழருக்கு) ஏற்படும், இலாப நட்டங்கள் என்ன?

பதில்: இந்தக் கேள்விக்கு சில வார்த்தைகளில் பதில் சொல்லிவிட முடியாது. வாசகர்கள் யாராவது கட்டுரை எழுதி அனுப்பினால் நல்லது.

T. மோகனதாஸ், பாடசாலைவீதி கோபாலபுரம், நிலாவெளி.

கேள்வி: நக்கீரரே! முரசேறு முதல்வன் திருமலை ஈன்ற திருமகன் இரா. சம்பந்தன் அவர்களைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: அன்றைய ஞான சம்பந்தரின் மறு அவதாரமே இரா. சம்பந்தன்! சம்பந்தனின் சேவை திருமலைக்கு நிறையத் தேவை!

கேள்வி: தமிழன் ஒருவன் எத்தனை சாதனை புரிந்தாலும் அவன் உயிருடன் இருக்கும் பொழுது புகழடைவதில்லை.

பொ. ஆ. இராமச்சந்திரன், ரஞ்சித் ஸ்டோர்ஸ், பெரண்டுவ, லெல்லோபிட்டிய, இரத்தின புரி.

பொழுதுபோக்கு: கவிதையெழுதுவது, கதைகள், கட்டுரைகள் எழுதுவது, தமிழ்நூல்களை வாசிப்பது என்பனவே.

K. பிரான்சிஸ் சவரி, 486/43, புளுமண்டால் வீதி, கொழும்பு —13.

பொழுதுபோக்கு: சினிமா, முத்திரை சேகரித்தல், கதை புத்தகம் வாசித்தல், வானொலி கேட்டல் ஆகியன.

---

அவன் இறந்த பின் தான் அவனுக்கு சிலை எடுக்கின்றனர். ஞாபகார்த்த விழா எடுக்கின்றனர். இதன் காரணம் என்ன நக்கீரரே?

பதில்: தமிழன் எதைச் செய்தாலும் ஆறஅமர யோசித்தே செயல்படுகிறான்! அப்படி யோசித்துக் கொண்டிருக்கும் பொழுது காலம் கடந்து விடுகிறது!

க. இராசரத்தினம், தம்பிலுவில், 2-ம் குறிச்சி.

கேள்வி: கடந்த ஆண்டைவிட இருக்கும் சில ஆண்டுகளில் கிழக்கில் என்ன நடக்குமோ?

பதில்: உதயசூரியன் உதிப்பான்!

தமிழினியன், மூதூர்.

கேள்வி தமிழர்களிடம் இருப்பது என்ன? இல்லாதது என்ன?

பதில்: இருப்பது மூளை! இல்லாதது ஒற்றுமை!!

கேள்வி பதில்
மே/பா சுடர்
194. ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.

# சுடர் வட்டம்

சின்னத்துரை தேவேந்திரன், 'இந்திரன்ஸ், 27 தனங்கிழப்பு வீதி, சாவகச்சேரி.

பொழுதுபோக்கு: சிறுகதை, கவிதை, பாடல் எழுதுதல், கலைசம்பந்தப்பட்ட ஆராய்ச்சி செய்தல், இசை கேட்டல்.

பொ. க. தெய்வேந்திரன், இல, 47, ஸ்டேஸன் ரோட், வெள்ளவத்தை.

பொழுதுபோக்கு: சிந்தனையைத் தூண்டும் சுடர், சுதந்திரன் பத்திரிகைகளைப் படித்தல், இலக்கிய ஆய்வு.

அ, அன்ரனி மனோகரன் (வன்னிராஜ்) ரோஸ்வாசம், முதலாம் கட்டை சுற்றி ஹொரவப் பொத்தானை வீதி, வவுனியா.

பொழுதுபோக்கு: சிறுகதை, கவிதை, நகைச்சுவை கட்டுரை எழுதுதல், நாவல் வாசித்தல்.

எஸ். மாலினி, இல. 3, வல்லிபுரம் வளவு கண்டிரோட், வவுனியா.

பொழுது போக்கு: வானொலி கேட்டல், சிறுகதை நாவல், வாசித்தல், சிறுகதை எழுதுதல்.

செல்வி எஸ். எஸ். மணி, மே/பா சீலன் ஞான, விநாயகபுரம், துணுக்காய்.

பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், நாவல், கவிதை, வாசித்தல், சினிமா பார்த்தல்.

எம். கந்தசாமி, கந்தகும்பற, பப்பரபன, வெலிமடை,

பொழுது போக்கு: அரசியல் துறையில் விருப்பம், தமிழ்ப்பணி, சமூக சேவை, வீட்டுத்தோட்டத்தில் தேனீ வளர்த்தல்.

மா. ரமணி பூம்புகார் நகர், கல்மடு, வவுனியா.

பொழுது போக்கு: பத்திரிகை, நாவல்கள் வாசித்தல், கதை கட்டுரை நாடகம் எழுதல்.

த. இளங்கோ. 215 G 3/1 அன்டர்சன் மாடிவீடுகள், பாக் வீதி, கொழும்பு—5.

பொழுது போக்கு: வானொலி ஒலி பெருக்கி, ஆகியவை செய்தல், முத்திரை சேகரித்தல்.

க சூரியகுமார். 563, இந்திர வாசா, ஆஸ்பத்திரி ரோட் யாழ்ப்பாணம்.

பொழுது போக்கு: சுடர் பத்திரிகை வாசித்தல், காட்சி படங்கள் சேகரித்தல், கதைப் புத்தகம் வாசித்தல், விளையாட்டுத்துறையில் ஈடுபடல்.

S. பிரசன்னா, 23, புகையிரத நிலைய வீதி, மட்டக்களப்பு.

பொழுது போக்கு: சுடர், சுதந்திரன் போன்ற கருத்துள்ள பத்திரிகைகளைப் படித்தல், வானொலி கேட்டல், கதை கவிதை படித்தல், படைத்தல்.

ஏ. எஸ் இராஜமணி தமிழ்தாசன், இல. 56, கல்பொத்த வீதி, கொழும்பு—13.

பொழுது போக்கு; இனத்திற்காக உழைப்பது செயல்படுவது, சுடர், சுதந்திரன் தீப்பொறி போன்றவற்றை பார்ப்பது, த. வி. கூட்டணித்தலைவர்களின் உரைகளை கேட்க முன்நிற்றல்.

செல்வன் நீ. ஜீவரட்டினம்,
55/3, நிமல மரிய மாவத்தை,
கெந்தலை, வத்தலை.

பொழுதுபோக்கு:
பத்திரிகை, சஞ்சிகைகள் வாசித்தல், கட்டுரை எழுதுதல், முத்திரை சேகரித்தல், வானொலி கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல்.

(தொடரும்)

# பசுமையான (சீமை) நினைவுகள்

## இளங்கோ

ஒரு காலத்தில் — சுமார் 25 வருடங்களுக்கு முன் — யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரும் பயணம் அசாதாரண— பெரிய நிகழ்ச்சியாக இருந்தது. ஒருவரை வழியனுப்ப இருபதுபேர் ரயில் நிலையத்துக்கு படையெடுப்பார்கள். அந்தக் காட்சி ஒரு சிறு திருவிழாவாகவே பார்ப்போருக்கு தெரியும். பயணம் செய்பவருக்கு அசல் கதாநாயகன் அந்தஸ்து தரப்படும். அவரும் கொழும்புக்கு வந்தவுடன் 'சுகமாக வந்து சேர்ந்தேன்' என்று சுருக்கமாக தந்தி ஒன்று கொடுத்து விட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பார்

இன்றோ நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. யாழ்தேவிப் பயணம் சர்வசாதாரணமாகி விட்டது. பழைய திருவிழாக் கூட்டம் —கலகலப்பு ஒன்றுமே இல்லை. கொழும்புப் பயணம் ஏதோ பக்கத்து வீட்டுக்கு போகுமாப்போல் ஆகிவிட்டது.

யாழ்—கொழும்பு பயணத்துக்குத்தான் இந்தக்கதி யென்றால் கொழும்பு — இலண்டன் (சீமை) பயணத்துக்கும் கிட்டத்தட்ட அதே 'கதி' வந்து விட்டது! ஏதோ அடுத்த ஊருக்குப் பயணப்படுவதுபோல் கொழும்புக்கும்—இலண்டனுக்கும் நம்மவர்கள் பறந்து கொண்டு இருக்கிறார்கள். இது போதாதென்று மத்தியகிழக்கு நாடுகளுக்கும் சம்பியா நைஜீரியா போன்ற ஆபிரிக்க நாடுகளுக்கும் நம்மவர்கள் நாள்தோறும் சிறகடித்துப் பறந்து கொண்டிருக்கிறார்கள்.

வெளிநாட்டில்—குறிப்பாக சீமையில்— இங்குள்ளவர்களது அண்ணன் — தம்பி மாமன்— மச்சான் அக்கா—தங்கச்சி இல்லாத குடும்பமே இல்லையென்ற அளவுக்கு குறைந்த பட்சம் தூரத்து உறவுக்காரரே இல்லையென்று சொல்லுமளவுக்கு நம்மவர்கள் அங்கு வதிக்கிறார்கள்.


வேலை தேடிப்போன காலம் போய்— படிக்கப்போன காலம் போய்—இன்று உல்லாச பயணிகளாய் நாளொன்றுக்கு குறைந்தது ஐம்பது பேராவது இலண்டனுக்கு பறந்து கொண்டிருக்கிறார்கள், அங்குள்ளவர்கள் அனுப்பும் Pre-Paid பயணச் சீட்டுக்களின் புண்ணியத்தால்.

சீமையில் இன்று ஏறத்தாள முப்பதினாயிரம் தமிழர்களாவது வேலை செய்து கொண்டோ—படித்துக் கொண்டோ—சும்மாவாகவோ இருக்கிறார்கள்.

இலண்டனில் மட்டுமல்ல—இங்கிலாந்தின் எந்தப்பகுதியிலும் சேலைகட்டிய—தாலியணிந்த தமிழ் பெண்களை காணாமல் இருக்க முடியாது.

ஒருமுறை ஒரு தமிழ்ப் பெண்மணி ஒரு அலுவலகத்திலிருந்து வீட்டிலுள்ள தனது கணவருடன் தொலைபேசியில் தமிழில் பொரிந்து தள்ளிக் கொண்டிருந்தார். தற்செயலாக அந்த இடத்துக்கு போய் இருந்த நான் அந்த பேச்சை சுவாரசியமாக செவிமடுத்தேன். ஆங்கிலத்தில் உரையாடினால் மற்றவர்கள் கேட்கக் கூடுமென்ற எண்ணத்தில் அந்த பெண்மணி ஆங்கிலத்தை கைவிட்டு தமிழில் பேசினாள். ஆனால் அந்த தமிழ்ப் பேச்சை இன்னொரு தமிழன் ஒட்டுக் கேட்கவில்லை—வெளிப்படையாகவே கேட்டுக் கொண்டிருக்கிறான் என்பதை அந்தப் பெண்மணி தெரிந்து கொண்டிருக்க நியாயமில்லை,

இந்தக் கட்டத்தில் வாசகர்களுக்கு ஒரு வார்த்தை, நான் எழுதப் போகும் இக் கட்டுரைத் தொடர் 'பயணக் கட்டுரை' என்ற தலைப்புக்குள்ளோ- அல்லது அந்தச் சொற்றொடர் குறிக்கும் இலக்கணத்துக்குள்ளோ அடைபட்டு விடாதென்று முன் கூட்டியே சொல்லிவிடுகிறேன்.



பங்கிங்காம் மாளிகையில் நடந்த இராணுவ அணிவகுப்புக் காட்சி

இரண்டு வருடங்கள்—இருபத்துநான்கு மாதங்கள் சீமையில் நான் கழித்த காலத்துக்குள் நான் கண்டு- கேட்டு இரசித்த எனது அனுபவங்களை—நினைவுகளை மட்டும் 'சுடர்' வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

(தொடரும்)

# என்னடா இது? பொல்லாத வாழ்க்கை

— சீர்மாறன் —

'இதோ நின்னுண்டிருக்காரே — காசிக்குப் போகப் போறவன் மாதிரி மீசையும் தாடியும் வைச்சிண்டு ! இவரு தான் இந்த கடைக்கிமுதலாளியும் சொந்தக்காரரும்: காசிக்குப் போகப்போறவா வேணும்னு தாடியும் மீசையும் வைச்சுண்டிருப்பா: அதுக்குண்ணு தாடியும் மீசையும் வைச்சுண்டு நிற்கறவா எல்லாம் காசிக்குப் போற புண்ணியவான்கள்—னு ஆயிடுமா? அது மாதிரித்தான், மனுஷாவில ரொம்பப்பேர், நல்லவளா இருக்கா: அதுக்காக மனுஷ மாதிரி நின்னுண்டிருக்கற—இவன்:- (மன்னிக்கணும் இவர்!)—எல்லாம் நல்லவன்னு அர்த்தம்?

'இந்த கடையில நாம எல்லாருமா எட்டுப்பேர் வேலை செஞ்சுண்டிருந்து—இன்னைக்கு இவங்களோடவுள்ள 'கணக்கு' 'சொந்தம்' 'உறவு' — எல்லாத்தையுமே முடிச்சுண்டு — முறிச்சுண்டு—வெளியே நான்போற மாதிரி எனக்கு முன்னாடியும் ரொம்ப பேர் 'பிரியாவிடை பெத்துண்டு' போயிருக்கா—எனக்குப் பின்னாடியும் ரொம்ப பேர் போவத்தான் போறா—இன்னைக்கு நான் போவப் போறன்! யார் இந்த கடைய விட்டுண்டு போனாலும் நாம என்ன வெறும் கூலியாட்கள் தானே— அப்படியென்ன கடையையா இழுத்து மூடிடப் போறா! 'போறதுன்னு' போ—'இருக்கறதுன்னா!—இரு'—ன்னு சொல்லிட்டு வேற ஆள் போட்டு நடத்துவா!

'என் கண்கள்லே — நீர் வர்றதைப் பார்த்துண்டு,—என்னைச்சுத்திண்டு நிற்கற இவா எல்லாம் 'இந்த கடையையும் இவ்வளவு தங்கமான முதலாளியையும்' விட்டுப் பிரிஞ்சு போறதுக்குதான் மனசு இல்லாம அழறேன்னு நெனைச்சுண்டு — இவாளும் சேர்ந்து அழறா போலேருக்கு!

நான் ஏன் அழறேன்னு தெரிஞ்சுக்காம — தெரிஞ்சுக்க முடியாம, — 'என்னமோ — என்னை இவா எல்லாம் முழுக்க புரிஞ்சுண்டமாதிரி—எனக்காக அனுதாபப்பட்டுண்டு அழறதைப்பார்த்தா — இவாளைப் பார்த்து—எனக்கு சிரிக்கணும் போல வருது ஆனாலும் சிரிக்கலை!

'ஒவ்வொரு மனுஷாளும் எவ்வளவு முட்டாள்தனமா தாங்க நின்னு நோக்கிண்டிருக்கற நோக்கில தான் அவா—இயங்கிண்டிருக்கறான்னா—என்ன மாதிரி தப்பா எடை போடறா?

நாம ஏழையா பொறந்துட்ட ஒரே காரணத்துனால படிக்கவும் முடியாம வசதியா வாழவும் முடியாம அன்றாட வயித்துப்பாட்டைப் பார்க்க வேண்டிய சின்ன வயசிலேயே இது மாதிரி கடையில கூலி வேலைக்கு சேர்ந்துண்டதுனால அறிவுமில்லாம முன்னேற்றமுமில்லாம வாழ்க்கையில வசதியுமில்லாம இருபது வருஷமாக இங்கேயே நம்ம உழைப்பு நேரம் பொழுது எல்லாத்தையுமே வீணாக்கிண்டு இப்போ வாழா வெட்டியா வெளியே கையிலே காசு மில்லாம போறதுன்னு அழுகை வராதா?

இப்படி, வாழவேண்டிய வாழ்க்கையையே வீணாக்கிண்டு, வாழாவெட்டியாகிண்டதுல — நான் மட்டுமில்ல என்னைச்சுத்தி அழுதுண்டு நிற்கறுவே இவாளும் எங்களை மாதிரி இந்த பஜார்லே ஒவ்வொரு கடையிலும் எத்தனை பேர் இருக்கான்னு நெனைக்கறப்போ மனசு என்ன மாதிரி வலிக்குது?

இருபதுவருஷமா என்னோட பொழுதை இங்கேயே

## சுடர் வாசகர் வட்டம்

ஒவ்வொரு கிராமங்களிலும் சுடர் வாசகர் வட்டம் அமைத்து கலை, இலக்கியப்பணி புரிய விரும்புபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். வாசகர் வட்ட தலைவர், செயலாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்களின் பெயர்களை தெரிவித்தால் அவற்றை சுடரில் பிரசுரிப்போம்.

எழுத்தாளர்களும் இவ் வாசகர் வட்டத்தை அமைத்து செயற்படலாம். வாசகர் வட்டத்தைச் சேர்ந்த இளம் எழுத்தாளர்களுக்கு சுடரில் முதலிடம் அளிக்கப்படும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

— ஆசிரியர் குழு


## விற்பனை பிரதிநிதிகள் தேவை!

சுடர் சஞ்சிகைக்கு விற்பனை பிரதிநிதிகள் இல்லாத இடங்களுக்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை.

ஒரு சஞ்சிகைக்கு ஒரு ரூபா வீதம் முற்பணம் செலுத்தவேண்டும். காசுக் கட்டளை / தபாற்கட்டளைகளை அனுப்பவேண்டிய முகவரி:

நிர்வாகி,
''சுடர்''
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை,
கொழும்பு-12.

வீணாக்கிண்டு பொழுதும் வாழ்க்கையும் வீணாப்போவு தென்னு மனசில உணர்ச்சி வந்து இனியாவது வாழ்க்கை யில நம்ம சொந்தகால்ல நிற் போம்னு தெம்பு வந்து ஊரோட ஒரு சின்ன கடை போட்டுண்டதுனால இன்னைக்கு இந்த கடையிலேருந்து 'பிரியா விடை' பெற்றப்போ ஒரு நூறு ரூபாய் மட்டும் கையிலே தந் திருக்கா!


இதுக்காகத்தான் அழ றேன்!

இந்த ஒரு நூறு ரூபா யோட இன்னுமொரு நூறு ரூபாய் தரக்கூடாதான்னு சும்மா இருக்கமுடியாம வாய் விட்டு கேட்டுண்டதுக்கு 'இல் லேன்னு இல்லேன்னு சொல் லிட வேண்டியதுதானே? அதுக்கேன் 'என்னப்பா.... போதாதா இது உனக்கு? ஐம்பது ரூபாதான் குடுக்க நினைச்சேன்; அப்புறம் பாவம்னு நூறு ரூபா குடுக் கப்போனா இன்னும் நூறு வேண்டிகிடக்கு? பண மென்ன சும்மாவா விளையுது இங்கே? நீங்க நெனைச்ச மாதிரி போறப்போவும் வர்றப்போவும் அள்ளிக்குடுக் கறதுக்கு?" ன்னு என்னமாதிரி நாறுபேருக்கு முன்னால சத்தம் வேற போட்டுண்டார்? (படவா சத்தம் போடறான்!)

'இந்தா வைச்சுக்கோ உன் நூறு ரூபாயைன்னு மூஞ்சியில விட்டெறிஞ்சிருப்பேன்? அப் புறம் இவ்வளவு நாளும் ஒழுங்கா விசுவாசமா இருந் துட்டு போறப்போ ஏன் வம் பிழுத்துட்டு போகனும்னு சும்மா இருந்துட்டேன்.

வெளியே மழை பெஞ் சிண்டிருக்கு! இங்கே எந்த நாளும் இப்படித்தான்

இதோ! நான் நின்னுண்டி ருக்கற பட்டடையிலே நின்னு பார்த்தா — பஸ் ஸ்டாண்டும் பக்கத்திலே தியேட்டரும்— மார்க்கட்டும் தெரியும்!



எங்க ஊருக்கு போற பஸ் அஞ்சுமணிக்கு வர்றேனுட்டு, ஆறுமணிக்குப் பின்னாடி வர் றப்போ—இப்போ மூணுமணி நான் ஏன்போய் மழையிலே நனைஞ்சுண்டு — பஸ்ஸுக்கு காத்துண்டு நிற்கணும்?

முதலாளி வந்துட்டார்னா மூணுமணின்னு அர்த்தம்! அவ ருக்கென்ன! காலையிலே எட்டு மணிக்கு கடைக்கு வந்தார்னா பன்னிரெண்டு மணி வைச்சு கணக்குப் பார்த்துண்டிருந் திட்டு, பன்னிரெண்டு அடிச் சதும், வீட்டுக்குபோய், குளிச்சு சாப்பிண்டுட்டு பொண்டாட்டி யோட இருந்துட்டு (அதுதான் இரவுக்கு வேறு பொண்டாட்டி கிட்ட போகணுமே?) அப்புறம் மூணுமணிக்கு இங்கே வந்து சேர்ந்தார்னா — ஐஞ்சு மணி வரையும் ஒவ்வொருவனையும் ஏசிண்டும் திட்டிண்டும் உட் கார்ந்திருந்துட்டு, கிளம்பி போயிடுவாரு!

நாம தான்—காலையிலே— நாலுமணிக்கே எழுந்துட்டு. (இல்லேன்னாதான்! கழுத்திலே பிடிச்சு வெளியே விட்டுடு வானே?) — எல்லாத்தையும் கூட்டி கழுவி துடைச்சு முடிய ஆறுமணியாகிடும்! அப்புறம் அவசர அவசரமா—ஆத்துலே போய் காலைகடன்களை முடிச் சுண்டு வந்து கடையை திறந் தோம்னா — ஆள்மாறி சாப் பிடப்போவ — ஒன்பதுமணியா கிடும்!

சனி ஞாயிறுன்னா, வியா பாரம் அதிகமாயிண்டதுனால அதுவுமில்ல! அப்புறம் பகல் சாப்பாட்டுக்கு எப்படியும் மூணுமணியாகிடும்!

இப்பவும் நேரம் மூணு மணி!

இன்னைக்கு எனக்கு வேலை யில்லை ஆனாலும் மனசில கவலை இருந்துண்டிருக்கறதுனால— பசியில்லாம மூணுமணிவரை யும் வேலை செஞ்சுண்டிருக் கேன்!

என்னமோ மனசு இல் லேன்னாலும் சாப்பிடணுமேங் கறதுக்காக போய் சாப்பாட் டுக்கு முன்னாடி உட்காந்துண் டிருக்கேன்! சாப்பிட மனசு இல்லை! பேய்மாதிரி அலைஞ் சுண்டிருக்கு இவ்வளவுக்கும், இதோ என் முன்னாடி கண் ணுக்கு தெரிஞ்சுண்டிருக்கே 'இந்த நினைவு மலர்' தான் காரணம்!

'இந்த நினைவு மலர்' எவ் வளவு அழகா பெறுமதியா

செலவு செஞ்சு அடிச்சிருக்கா! இந்த 'நினைவு மலர்' யாருக்குன்னு கடையில நின்னுண்டிருக்காரே கணேசமூர்த்தி முதலாளி, அவரோட அப்பா வேலுப்பிள்ளை முதலாளி அவரு இந்த கடைக்குமட்டுமில்ல— இந்த ஊருக்கே முதலாளி மாதிரி! அவருக்கு சிலைவைச்சு கும்பிடாத கொறை! அவருக்குதான் இந்த நினைவு மலர்!

என்னை முதன் முதல் அந்த வயசில இந்த கடைக்கு வேலைக்கு சேர்த்துண்டவர்— இவர் தான்! ரொம்ப பேர் போன வியாபாரி! நல்லா வியாபாரம் பண்ணுவார்! சின்னவயசிலேருந்த இந்த ஊருக்கு வந்து இங்கேயே வியாபாரம் தொடங்கிண்டு கடை போட்டு, ஆலமரம் மாதிரி இவ்வளவு பெரிய வியாபாரியாகிட்டார்.

இவரோட வியாபாரத்தையும் பணத்தையும் கண்டு, இங்கு இருக்கிறவே கொஞ்ச 'வேற்று இனம்' அவாளுக்கெல்லாம் ரொம்ப பொறுமை! அவாளோட பணத்தையெல்லாம் இவர் சொரண்டுறார்—னு 'ரகசியமா பேசிக்குவா'

கலவரம் வர்றப்போ— எல்லாருமே பயந்துண்டு முடிஞ்சளவு சொத்துகளை காவிண்டு ஊரோடு போய்ச் சேர்றப்போ ரொம்பபேர்— இவருக்கும் புத்தி சொன்னு! ஆனு இவரோ "என்னுடை உயிரே போனுலும் காரியமில்லே! கடையை மட்டும் விட்டுண்டு" வரமாட்டேன்னு பிடிவாதம் பிடிச்சுண்டார்! ஆமா! பணக்காரனுக்குத் தானே தெரியும் பணத்தோட அருமை!

கலவரம் நடந்திண்டிருக்கறப்போ இவரும் இவர் மாதிரி ரெண்டு மூனு முதலாளியும் சேர்ந்துண்டு அவா கடமையைச் செய்யறதுக்கே பொலிசுகாரருக்கு ரெண்டோ மூனு லட்சம் ரூபா சேர்த்து குடுத்தா! அதுல இவர் மட்டும் ஒரு லட்ச ரூபா கொடுத்தார் போலேருக்கு! அதுமட்டுமா? அவன் வர்றப்போவும், போறப்போவும், சாப்பாடுன்னும் சாராயம்னும் உடுப்புன்னும் சிகரெட்டுன்னும், எவ்வளவு செலவு செஞ்சார்! இவ்வளவு செலவு செஞ்சதுக்கு அவா எல்லாம் சேர்ந்துண்டு, கடையை காப்பாத்தி குடுத்தா தான்!

ஆனுல் என்ன பிரயோஜனம்!

**இரசிகமணி நினைவுப் போட்டியில் பாராட்டுப் பரிசுபெற்ற கதை**

இவர் இப்படி செஞ்சுண்டது அந்த தெய்வத்துக்கே பொறுக்கல போலும்! ஆமா! அது சரிதானே! சம்பாதிச்சதையெல்லாம் இவாளுகளுக்கு 'லஞ்சம்' குடுக்கறதிலேயே செலவு செஞ்சு முட்டாள்தனமா தங்களை மட்டும் காப்பாத்திக்கறதை விட்டுண்டு, இந்த மூலதனத்தை கொண்டுபோய் இவா ஊர்லே போட்டுண்டா இவாளுக்கும் இவா இனத்துக்கும் என்னமாதிரி பயன்பட்டிருக்கும்!

கலவரம் முடிஞ்சு நிலைமை சீராகிண்டிருக்கறப்போ இவர் ஒரு நாள் கோயிலுக்கு போயிண்டிருக்கறப்போ கோயிலடியிலே வைச்சு யாரோ கத்தியாலே குத்திட்டா!

அப்புறமென்ன! அந்த பொலிசு என்ன செய்யும்? 'அந்தா' 'இந்தா'ன்னு கொஞ்ச நாள் ஓடித்திரிஞ்சா அவ்வளவு தான்! 'இவா தான்' சதி செஞ்சு செய்தான்னும் யாரோ பேசிண்டா?

'எல்லா மனுஷாளுமே எல்லா மனுஷாளையும் எப்படியாவது ஏமாத்தணும்—னு அலைஞ்சுண்டிருக்கறு!"

இவரை ஒரு மாசமா ஆசுப்பத்திரியிலே வைச்சுண்டிருந்தும் எல்லா சிகிச்சையும் செஞ்சும் உசிரை காப்பார்த்த முடியலே! பாவம் செத்துப்போயிண்டதுக்கு நினைவாகத்தான் ஒரு மாசத் துக்கப்புறம் ஆறுயிரம் ரூபா செலவுபண்ணி ரெண்டு மொழிகள்லேயும் இப்படியொரு 'நினைவுமலர்' அச்சடிச்சா! அப்பகூட 'செத்துப்போயிண்டவருக்கு என்னத்துக்கு இவ்வளவு செலவுபண்ணி— பணத்தை வீணுக்கணும்—னு' ரொம்பபேர் திட்டினு! பணத்திமிர்ல காதெல்லாம் அடைச்சுப்போயிண்டவாளுக்கு ஊர்ல நாலு நல்ல மனுஷர் சொல்றதா கேட்கப்போவுது என்ன?

அந்த 'நினைவுமலர்' அடிச்சதிலேருந்து இந்த முதலா


**சுடர்**

CHUDAR

**மாதம் ஒரு சிறுகதைக்கு பரிசு!**

எழுத்தாளர்களை ஊக்குவிக்குமுகமாக ஒவ்வொரு மாதமும் சிறந்த ஒரு சிறுகதையை தேர்ந்தெடுத்து பரிசளிக்கும் திட்டம் ஒன்றினை செயற்படுத்தி வருகிறோம்.

சிறந்த சிறுகதை என நாம் தேர்ந்தெடுக்கும் கதைக்கு ரூபா 25 பரிசாக வழங்கப்படும். ஒவ்வொரு மாதமும் இப்பரிசு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

சிறுகதைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர்,

சுடர்

194 ஏ, பண்டாரநாயக்க வீதி

கொழும்பு—12.

# எங்கள் பயணம் இன்னும் தொடரும்

காடுகள், மேடுகள், கள்ளி முள்பாதைகள்,
காற்றின் கொடுமைகளை, காலத்தின் கேடுகள்,
கயவரின் தீமைகளை— எல்லாம் கடந்து...
எங்கள் பயணம் இன்னும் தொடருது...
கால்கள் எங்கணும் இரத்தக்கசிவுகள்
கைகள், தலைகளில் ஆயிரம் சுமைகள்,
கண்கள், வயிறுகள் தோள்களில் நோக்காடு,
வெந்த நெஞ்சங்களின் வேதனைக் கூப்பாடு,
எந்த தடுப்புகள்... எதிர்வந்த போதிலும்,
எங்கள் பயணம் இன்னும் தொடருது,
வெள்ளத்தடுப்புகள், வெய்யோன் சூடுகள்,
கொல்லத்துடிக்கின்ற கொடியவர் நாடுகள்,
சொல்லப்பயப்படும் சுடலைக்காட்சிகள்,
எல்லாம் எங்களை ஏமாற்றப்பார்க்குது,
மாடிவீடுகள் மஞ்சப் படுக்கைகள்,
மற்றவர் வியக்கும் மரச் சோலைகள்,
பால் பழங்கள், பன்னீர் ரசங்கள்,
நீலப்பூவகை நெஞ்சை மயக்கிடும்,
பச்சைப் புல்வெளி, பண்பாய் அழைக்குது:
நஞ்சை விதைத்திடும்... இவைகளை நம்பாமல்,
எங்கள் பயணம் இன்னும் தொடருது,
பட்டம் பதவிகள்... பதினாறு செல்வங்கள்,
தட்ட நினைத்திடும் தங்கச் சுரங்கங்கள்—மா
வட்டம் போட்டே வளைத்திட பார்க்குது,
வீரசுதந்திர விடுதலைப் பயணத்தில்,
வீதி நாய்கள் வெறி கொண்டு தாக்குது,
விடிவினை நோக்கிடும் எங்கள் பயணம்,
விரையுது, விரையுது, தடைகளை நீக்கி.

---

ளிக்கு கொஞ்சம்கூட மூஞ்சி சரியில்லை! அவ்வளவு பணத்தையும் எப்படி பெறலாம்ங்கறதுதான் யோசனை

அவரோட யோசனைப்படி நாம தான் இருக்கற சாமான்களையும் ஒளிச்சுவைச்சுண்டு 'இல்லேன்னு' சொல்லி 'பிளாக் மாக்கட்டுக்கு' போட்டு கள்ள விலைக்கு வித்து அவ்வளவு பணத்தையும் ஆறுமாசத்துக்குள்ளே திருப்பிக்கொடுத்தோம்!

இவ்வளவும் உழைச்சது செஞ்சது எல்லாமே நாங்க. நாங்க இப்போ வெளியே போறப்போரோம்னு ஒரு நூறு ரூபாய் கூட கேட்டுண்டதுக்கு என்னமாதிரி ஏசிண்டான்? இப்படிப்பட்டவன்களுக்கு இனிமேலும் ஒரு ஆபத்து வந்துட்டா எங்க மனசில எப்படி கவலை வரும்?

சாப்பிடாம இவ்வளவு நேரமும் யோசிச்சுண்டே உட்காந்திருந்துட்டு இப்போ எழும்பிப்போய் சாப்பாட்டை கொட்டிண்டு கைகழுவிண்டு முன்னுக்கு போறேன்!

அழுகறதை நிப்பாட்டி எல்லாரும் என்னமோ பேசிண்டு வேலை செஞ்சிண்டு நிற்கரு!

இனிமே இவா அழ மாட்டா! ஆனா, என் மனசு இன்னும் அழுதுண்டிருக்கு! 'இன்னைக்கு நான் அழுதுண்டு வெளியே போற மாதிரி, என்னைக்காவது ஒரு நாள் இவாளும் வெளியே போறப்போ, அழுதுண்டுதான் போகப்போறான்னு நெனைக்கறப்பவே இப்பவே இவாளுக்காகவும் சேர்த்து மனசால கொஞ்சம் அழணும் போல வருது! ஆமா! இந்த அப்பாவிகளுக்காகவும் அழறேன்.

ஆனா! நாங்க மனம்நொந்துண்டு வடிக்கற கண்ணீருக்கான பாவமெல்லாம் சேர்ந்துண்டு என்னைக்காவது ஒரு நாள், இதோ நின்னுண்டிருக்கானே, இந்த முதலாளிப் பயலையும் கண்ணீர் வடிக்க வைக்கும்னு நெனைக்கறப்போ மனசுல தெம்புவருது!

'இப்போவும் மழை பெஞ்சிண்டிருக்கு! ஆனாலும் விடை பெற்றுண்டு போயிண்டிருக்கேன்! நனைஞ்சுண்டு போறேன்! ஏன்னா கொதிக்கற மனசுக்கு, மழையில நனையறது கொஞ்சம் சுகமா இருக்கும்!

(யாவும் கற்பனை)

# முத்திரையின் வரலாறு

க. மாணிக்கம்

முற்காலத்திலே கடிதப்போக்கு வரவுகள் அஞ்சல்காரர் மூலமாக நடந்து வந்தன. சில நாடுகளிற் புருக்கள், நாய்கள் மூலமாகவும் கடிதங்களைக் குறிப்பிட்ட இடங்களுக்கு அனுப்பி வந்திருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. ஆதியில் மரப்பட்டைகளும், ஓலைகளும், பதனிடப்பட்ட தோல்களும், ஒரு வகை நாணற் புல் இதழ்களுமே கடதாசிக்குப் பதிலாக உபயோகிக்கப்பட்டன.

இந்நாளிற் போக்குவரத்து வசதிகளில் எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன. விஞ்ஞானிகளால் உலகம் பல விதத்தில் மாற்றமடைந்து விட்டது. பட்சிகளைப்போல ஆகாயத்திற் பறப்பதற்கும், மச்சங்களைப் போல் நீருள் செல்வதற்கும் விஞ்ஞானிகள் அறிந்திருக்கிறார்கள். விஞ்ஞானத்தின் உதவியாற் புதிய புதிய நவீனங்கள் — கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டன. முக்கியமாகத் தபால் போக்குவரத்து இன்றைய தினம் சிறந்த முறையில் நடை பெறுகிறது.

தபாற் கந்தோரில் கடித உறை, தபால் முத்திரைகள், தபால் அட்டைகள் ஆகிய பல விற்கப்படுகின்றன. அவைகள் முறையே எழுந்த வரலாறு மிகவும் உருசிகரமானது.

1839ம் வருஷம் டிசம்பர் மாதம் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் ஓர் "பென்னி தபால்" முறை முதன் முதலாகக் கொண்டு வரப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. அப்பொழுது தபால் முத்திரைகள் கண்டுபிடிக்கப்படவில்லை. அதன் காரணமாக ஓர் "பென்னி தபால்" முறை நாட்டில் அதிகமாகப் பரவவில்லை. ஆனால், தபால் தலைகள் ஜனித்த பின்புதான் அத்தபால் முறைக்கு மகத்துவம் பிறந்தது; செல்வாக்கும் ஏற்பட்டது.

இன்றைய தினம் ஒவ்வொரு தபால் காரியாலயத்திலும் அரசாங்கத்தார்களால் வெளியிடப்படும் பல விதமான முத்திரைகள் இருக்கின்றன. அவைகளை உபயோகப்படுத்தி நமது கடிதப்போக்குவரத்துகளை நாம் நடத்தி வருகிறோம். கடிதப் போக்குவரத்துச் சரித்திரத்தில், இத்தகைய தபால் முத்திரைகளின் ஜனன சம்பவம் மிக மிக முக்கியமானதாகும். இவைகள் முதன் முதல் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டன? யார் அவைகளை ஆரம்பித்தனர் என்ற சந்தேகங்கள் ஏற்படுவது சகஜமே. சந்தேகங்களை ஒவ்வொருவரும் அறிந்திருப்பது மிகவும் அவசியமாகும்.

ஓர் "பென்னி" தபால் முறையை ஆரம்பித்தவர் சர். ரொலண்ருஹில் என்பவரே. இவர் தபால் சம்பந்தமாகவே நீண்ட காலம் ஆராய்ச்சி செய்தவர். இவர் முத்திரைகளை உற்பத்தி செய்து கடிதப் போக்குவரத்திற்கு உபயோகப்படுத்த வேண்டுமென்று எண்ணி இருக்கலாம். ஆனால், இவரையே முத்திரைகளின் மூலகர்த்தர் என்று சொல்லுவதற்கில்லை. ஏனெனில், ஸ்ரீஜேம்ஸ் சால்மேர்ஸ் என்பவரும் முத்திரைகளின் உற்பத்தி சம்பந்தமாக வேலை செய்தவர், அவருடைய யோசனையே முத்திரைகளின் ஜனனத்திற்கு உதவி செய்தது.

ஸ்ரீ ஜேம்ஸ் சால்மேர்ஸ் அச்சுக்கூட வேலையில் ஈடுபட்டவர். 1825ம் வருஷத்தில் இருந்தே தபால் விஷயமாக அவர் ஆராய்ச்சி செய்து வந்தார். கடிதங்களை உபயோகம் செய்யும் முறையில் ஏற்படும் காலதாமதத்தை போக்க அவர் இடை விடாது முயற்சி செய்து வந்தார். புதிய வழிகளைக் கண்டு பிடித்தார். இதற்கு மத்தியில் அவர் தமது அச்சுக் கூடத்தில் சில மாதிரித் தபால் தலைகளை உற்பத்தி செய்தார். அம் முத்திரைகள் அச்சடிக்கப்பட்டுள்ள காகிதத்தின் பின்புறம் பசை இருக்கும்படியாகவும் சில முறைகளைக் கைப்பற்றினார். பசையுடன் கூடிய முத்திரைகள் முதன் முதலாக இவ்விதம் பிறந்தன. அவைகளைச் சில வியாபாரிகளிடம் காட்டினார். வர்த்தகர்கள் இத்தகைய முத்திரைகள் தங்

## மடலூருவது என்றால் என்ன?

பண்டையத் தமிழக வரலாற்றில் ஆண் மகன் ஒருவன் தான் காதலித்த ஒரு பெண்ணை மணக்க முடியாவிட்டால் மடலூருவதுண்டு. பனங்கருக்கினால் குதிரை ஒன்று செய்து அதன் மேல் அவன் ஏறி அமர்ந்து தன் காதலியின் வடிவந்தீட்டிய கொடி ஒன்றை தன் கையில் ஏந்திக்கொள்வான். இந்த ஊர்தியைத் தெருத்தெருவாக இழுத்துச் செல்வார்கள். பனங்கருக்கினால் அறுப்புண்ட அவன் உடலில் குருதிவடியும். ஊராரும் பெண்ணின் பெற்றோரும் அவன் துயரைக்கண்டு இரக்கம் கொண்டு அப்பெண்ணை அவனுக்கே மணமுடிப்பார்கள்: பெண்கள் மடலூருவதில்லை. ஆனால் பிற்காலத்தவரான நம்மாழ்வார், தலைவி ஒருத்தி பிரிவாற்றாமை மேலீட்டால் 'காதல் கைமிக்கு மடலூரத் துணிந்தாள்' என்று பாடுகின்றார்.

அனுப்பியவர்:

செல்வி சா. யோகமலர், கிரான்.

---

களுக்கு அதிக உதவியாக இருக்கும் என்று கண்டு கொண்டனர். அவர்கள் எல்லோரும் முத்திரைகளைக் கண்டு பிடித்த ஸ்ரீ சால் மேர்ஸைப் புகழ்ந்தனர். ஸ்ரீ சால்மேர்ஸ் பின்பு மூன்று வருடங்கள் வரையில் இம் முயற்சியில் மேலும் தொடர்ந்து வேலை செய்யாமல் இருந்து விட்டார். கடைசியில் 1837ம் வருஷம் அவர் முத்திரை கண்டு பிடித்துள்ள விஷயம் அரசாங்க அதிகாரிகளுக்கு எட்டிற்று. ஓர் பாராளுமன்ற அங்கத்தினர் அவருக்கு உதவி செய்து அவரது முயற்சியைப் பாராளுமன்றம் அங்கீகரிப்பதற்காக முயற்சி எடுத்துக்கொண்டார். ஏனெனில், அவரும் தபால் சீர்திருத்த "கமிட்டியில்" ஓர் அங்கத்தினர்.

இதற்கு மத்தியில் தபால் முத்திரையை முதன் முதலாகக் கண்டு பிடித்தவர் சர். ரோலண்டு ஹில் தான் என்றும், ஸ்ரீ சால் மேர்ஸ் என்பவர் பிறகுதான் அதைக் கண்டு பிடித்தார் என்றும் பலர் பேசத் தொடங்கினர். பிரஸ்தாப இருவரில் தபால் முத்திரைகளை முதலில் யார் கண்டு பிடித்தார்கள் என்று சொல்வதற்கில்லை.

தபால் தலைகளை எப்படிச் செய்ய வேண்டும் என்பதற்கு மாதிரிகளைப் போட்டுக் காட்டியவர் சர் ரோலண்டு ஹில் தான் என்று தெரிகிறது. அவர் போட்ட மாதிரிகளை ஏராளமான பணங்கொடுத்துத் தபால் அதிகாரிகள் விலைக்கு வாங்கினார்கள். ஆனால், பரீட்சித்துப் பார்த்த போதில் சரிவரவில்லை என்று தெரிகிறது.

கடைசியில் ஸ்ரீ ஹென்றி கார் பவுலட் என்பவர் முத்திரையின் உற்பத்திக்கேற்ற மாதிரிகளைத் தயார் செய்து கொடுத்தார். பின்னர், விக்டோரியா மகாராணியின் தலை அடையாளத்துடன் முத்திரைகள் பிறந்தன. மக்கள் எல்லோரும் ஆச்சரியத்துடன் அத் தபால் தலைகளைப் பார்த்தனர்.

இத்தகைய புதிய முறையை மற்றத் தேசங்கள் உடனே பின்பற்றவில்லை. பிரேஸில் தேசம் பிரிட்டனுக்கு இரண்டாவதாகப் பசை பூசிய தபால் தலைகளை உபயோகிக்கத் தொடங்கியது. அங்கு முத்திரைகள் 1848ல் உற்பத்தி செய்யப்பட்டன. பின்பு ஐக்கிய அமெரிக்காவும் இம் முறையை மேற்கொண்டது. 1849ல் பிரான்ஸ், பெல்ஜியம் முதலிய தேசங்களிலும் இத்தபால் முத்திரைகள் இடம் பெற்றன. அதிகம் கூறுவானேன்? இன்றைய தினம் உலகம் முழுவதும் இம் முறை கையாளப்பட்டு வருகிறது. பழைய, புதிய தபால் தலைகளைச் சேர்த்து வைப்பதில் இன்றைய தினம் அனேகர் அதிகமான பிரியங்காட்டி வருகிறார்கள். தபால் தலைகளைச் சேர்ப்பதை ஓர் இஷ்ட வேலையாகப் பலர் மேற்கொண்டிருக்கிறார்கள். காலஞ்சென்ற மாட்சிமை தங்கிய 5-ம் ஜோர்ஜ் அரசர் முத்திரைகள் சேகரிப்பதில் மிகுந்த ஊக்கம் காட்டினார்.

ஓர் "போஸ்ட்கார்டு" எழுதிப்போடுங்கள் என்று நாம் இன்றைய தினம் சர்வ சாதாரணமாகப் பேசுகின்றோம்; சொல்லி வருகின்றோம். ஆனால், இந்த அழகிய "கார்டை" முதன் முதலாக ஆரம்பித்தவர் யார் என்று தெரிந்துகொள்ள வேண்டாமா? செய்திகளை குறைந்த விலையில் அகப்படும் "கார்டில்" எழுதி அனுப்புவதற்கு ஆதிகாரண புருஷராக இருந்தவர் டாக்டர் எமானுவல் ஹெர்மன் என்பவரே. அவர் ஆஸ்திரிய தேசத்தவர். "கார்டை" முதன் முதலாகச் சிருஷ்டித்த "பிரமா" இவர்தான். இவ்விதமே உலகத்தில் விஞ்ஞானிகள் — அறிவாளிகள் ஆச்சரியப் படத்தக்க பல விஷயங்களைப் புரிகிறார்கள்.

(வீரகேசரி வாரப் பதிப்பில் உள்ள கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டது.)

நன்றி: நவமணிவாசகம்.

---

மனிதனுக்கு நலம் செய்யும் கொள்கை என்பது எந்த மனிதனையும் பலியிடுவதாக இருக்கக்கூடாது.

— ஆல்பர்ட் ஸ்விட்ஸர்.

# மேடை

### மட்டுநகர்

மட்டுநகர் மாநகர சபைத்தேர்தல் இன்னும் இரண்டு மாதத்தில் நடத்தப்படுமென்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது. ஆனுல் தேர்தல் இப்போதைக்கு நடக்காது என்பது நிச்சயம். 'தேர்தல் நடந்தால் தோல்வி நிச்சயம் என்பது தெட்டத் தெளிவாகத் தெரிவதால்—தேர்தலை 'அண்ணர்' நடத்த விட மாட்டார்' என்று மட்டுநகர் மாஜி எம். எம். சி. ஒருவர் வாய்விட்டு—மனந்திறந்து சொல்லி இருக்கிருர்.

### நூற்றுண்டு விழா

நாவலர் நூற்றுண்டு விழாக்கொண்டாட நாவலர் சபை வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது. இதற்குள் எப்படியும் நுழைந்து இடம் பிடித்துக்கொள்ள வேண்டுமென்று 'பிராந்தியம்' ஒற்றைக் காலில் நிற்கிறதாம்! அதற்காக தனது எடுபிடி ஒருவரை அடிக்கடி 'தூது'விட்டு ஆழம் பார்க்கிருராம்.

### அ. இ. அ. தி. மு. க.

அண்ணு தோற்றிய திராவிட இயக்கம் எளிமைக்கு பெயர்போனது. குடிசைகளில் வதியும் சாமானிய குடிமக்களுக்காகவே அண்ணு கட்சி நடத்தினுர்.

ஆனுல் அவரது பெரியல் இயங்கும் அ. இ. அ. தி. மு. க. பெரிய ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலேயேதனது விருந்து கேளிக்கை வைபவங்களை வைக்கிறது.

அ. இ. அ. தி. மு. க. வில் இருப்பவர்கள் என்ன அவ்வளவு பெரிய கோடீசுவரர்களா?

ஹோட்டலுக்குப் பதில் குப்பத்தில் கூட்டம் வைத்தால் குடி முழுகியா போய்விடும்?

இப்படிப்பட்டவர்கள் அந்த மனித தெய்வம் அண்ணுவின் பெயரை நீக்கிவிட்டு இயக்கம் நடத்துவது எல்லோருக்கும் நல்லது.

### முன்மாதிரி

'சுடரின்' விற்பனையை அதிகரிக்க வட்டுக்கோட்டை பா. உ. திருநாவுக்கரசு முன் வந்திருக்கிருர். தனது தொகுதி ஆதரவாளர்கள் மத்தியில் 'சுடரை' பரப்ப நூறு பிரதிகளை வாங்கி விநியோகிக்கிருர். நாளடைவில் இதனை இன்னும் பல நூருக்கும் முயற்சியின் முதற்படி இது என்று சொல்கிருர். இவரின் முன்மாதிரியை ஏனைய பா. உ.க் களும் பின்பற்றுவது நல்லது.

**நக்கீரன்**

---

## ஜப்பானிய மணிக்கதை

ஹக்குயின் என்ற புத்த ஞானியிடம், ஒரு புகழ் பெற்ற ஜப்பானிய நாட்டு வீரன் தன் சந்தேகம் ஒன்றை கேட்டான்.

"குருவே சொர்க்கம் என்றும் ஒன்று இருப்பது உண்மைதானு"?

ஹக்குயின் அவ்வீரனை நோக்கி, 'நீ யார்'? என்று கேட்டார்.

"நான் நமது மாண்புமிகு சக்கரவர்த்தியின் பாதுகாவலன்" என்ருன் அவன். "அடே முட்டாளே, உன்னை பார்த்தால் பிச்சைக்காரன் போல் தெரிகிறது. எந்த ராஜா உன்னை வீரனுக வைத்துக்கொண்டார்?" என்ருர் ஞானி.

வீரனுக்கு கோபம் பொங்கியது. உடனே தன் உடை வாளை உருவினுன். ஹக்குயின் கூறினுர் "ஓ! கத்திவேறு வைத்திருக்கிருயா? நான் பந்தயம் கட்டுகிறேன், என் தலையை கூட வெட்ட முடியாத அளவுக்கு அது மழுங்கி இருக்கும் என்று" என்ருர்! வீரனுக்கு கோபம் பொங்கியது. உருவிய வாளுடன் ஹக்குயின் முன் வந்தான்.

"இப்பொழுது உனக்குப் பாதிபதில் கிடைத்து விட்டது, நீ, இப்போது நரகத்தின் கதவுகளை திறந்து விட்டாய்" என்ருர், புத்த குரு. வீரன் பின்வாங்கினுன். உடைவாளை தன் உறையில் செருகினுன். அவரை வணங்கினுன். "இப்போது உன் கேள்வியின் மறுபாதிக்கு பதில் கிடைத்து விட்டது. நீ சொர்க்கத்தின் கதவுகளை திறந்து விட்டாய், என்ருர் ஞானி!

— ஈழகணேஷ்.

சுடர்
CHUDAR
(கலை இலக்கியத் திங்களிதழ்)

வள்ளுவராண்டு 2010
ஆடி — 1979
சுடர் — 5
ஒளி — 4
ஆரம்பம்: சித்திரை 1975

வெளியிடுபவர்கள்:
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
194 ஏ, பண்டாரநாயக மாவத்தை,
கொழும்பு—12.
ஆசிரியர்: கவிஞர் காசி ஆனந்தன்.

# தமிழ் திரைப்பட இறக்குமதி

ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர் தமிழ் திரைப்பட இறக்குமதி கிட்டத்தட்ட முற்முக நிறுத்தப்பட்டுவிட்டது.

அம்மாவின் ஆட்சியில் கூட தமிழ்ப் படங்கள் ஓரளவு சீராக தமிழ் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன.

ஆனல் ஐயாவின் ஆட்சியில் மருந்துக்கு இரண்டொரு படங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது—கடந்த இரண்டு ஆண்டுகளில்!

'என்ன விலை கொடுத்தும் தமிழ் படங்களை இறக்குமதி செய்ய ஜனதிபதி உத்தரவு' என்று பத்திரிகைகளில் செய்தி வருகின்றதே ஒழிய படங்கள் வந்தபாடில்லை.

தாய் தமிழ் நாட்டிற்கும் சேய் தமிழ் நாட்டிற்கும் இடையில் இருக்கின்ற கலாசாரத் தொடர்பை அறுக்கவேண்டும் — துண்டிக்கவேண்டும் என்பது ஆட்சியாளரின் நப்பாசையாக இருக்கிறதுபோலும்!

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவதில் 'தர்மிஷ்ட' அரசாங்கத்தை யாரும் மிஞ்ச முடியாது!

தமிழ் திரைப்படங்களுக்கு 'இரும்பு விலை' கேட்கிறது சிங்கள அரசு!

தமிழ் நாட்டு திரைப்பட வர்த்தக சம்மேளனம் 'இரும்பு விலைக்கு' படங்களை விற்க மறுக்கிறது. அதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது!

ஆங்கிலப் படங்களும் பிறமொழிப் படங்களும் இறக்குமதி செய்யப்படுவதற்கு கட்டுப்பாடு இல்லை. அந்நிய செலாவணிப் பஞ்சமும் இல்லை.

தமிழ்பட இறக்குமதியில்தான் சிங்கள அரசு ஓரவஞ்சனை காட்டுகிறது!

தமிழ் ஈழம் தனிநாடாக வேண்டும் என்பதற்கு இந்தப் புறக்கணிப்பு ஓரவஞ்சனை—அற்பத்தனம் இவையே போதுமான காரணங்களாகும்!

தமிழ் ஈழம் மலர்ந்தால் தமிழ் படங்கள் தமிழ் நாட்டிலும்—ஈழ நாட்டிலும் ஏக காலத்தில் திரையிடப்பட நிச்சயமாக ஈழ நாட்டு அரசு ஏற்பாடு செய்யும்!

தமிழ்பட இரசிகர்கள் சிந்திப்பார்களாக!

"மில்க்வைற் அப்பியாசக் கொப்பி"

100 மில்க்வைற் நீலசோப் அல்லது
25 மில்க்வைற் பார்சோப் அல்லது
10 மில்க்வைற் ஒரு இரு. பெட்டி
சலவைப்பவுடர் அல்லது
50 நியூ மில்க்வைற் சோப்

மேலுறைகளை அனுப்பி மேற்படி அப்பியாசக் கொப்பியை பெற்றுக்கொள்ளுங்கள்

MWS
மில்க்வைற்

மில்க்வைற்—யாழ்ப்பாணம்
தொலை பேசி 7233

கிளை:
79, மெசஞ்சர் வீதி,
கொழும்பு 12.
தொலை பேசி: 36063

உங்கள் சீருடைகளை மிகவிரைவில்
அழுக்கை அகற்றி வெண்மையாக்கும்



மில்க்வைற்
சலவைப் பவுடர்.


## "சுடர்" வட்ட நிபந்தனை

சுடர் வட்டத்திற்கு ஆயிரக்கணக்கான நேயர்களின் அஞ்சலட்டைகள் வந்து குவிந்துள்ளன. அத்தனையையும் பிரசுரிக்க முடியாமையால் சிறு அன்பான நிபந்தனை ஒன்றை வாசக சகோதரர்கள் மீது விதிக்க தீர்மானித்திருக்கிறோம். குறைந்த பட்சம் 6 மாத சந்தா தொகைக்கான போஸ்டல் ஓடருடன் வரும் பெயர்கள் மாத்திரமே சுடர் வட்டத்தில் பிரசுரிக்கப்படும்.

'சுடர்' வட்டம்
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.

## 'சுடர்' சந்தா விபரம்

ஆறு திங்கள் — 6-00
ஒரு ஆண்டு — 12-00
(தபாற்செலவு உட்பட)

நிர்வாகி அவர்கட்கு,

இத்துடன் அரை/ஒரு வருட சந்தா தொகையான ரூபா.........க்கான மணி ஓடர்/போஸ்டல் ஓடரை அனுப்பி வைக்கிறேன். என்னையும் சந்தாதாரராக சேர்த்துக் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

முழுப்பெயர்: ..............................................

விலாசம்: ..............................................

..............................................

நிர்வாகி,
சுடர்,
194 ஏ, பண்டாரநாயக்க வீதி
கொழும்பு-12




...ந்திகை 194 ஏ,பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு—12ல் உள்ள
... நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.